தொகுதி 6, இதழ் 19

ஏப்ரல் 01–15, 2026

இலவச விநியோகத்திற்காக

# நியூ இந்தியா சமாச்சார்



**தேசிய கடல்சார் தினச் சிறப்பிதழ் – ஏப்ரல் 5**

## வாய்ப்புகளின் பாலமாக மாறும் பெருங்கடல்கள்

'செழுமைக்கான துறைமுகங்கள்', 'முன்னேற்றத்திற்கான துறைமுகங்கள்' மற்றும் 'உற்பத்தித்திறனுக்கான துறைமுகங்கள்' என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை, இந்தியக் கடல்சார் துறையின் சகாப்தத்தில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.



For e-copy

ஏப்ரல் 1: உத்கல் தினம்:

# ஒடிசாவின் வரலாறு, இலக்கியம் மற்றும் இசையால் இந்தியா பெருமிதம் கொள்கிறது

ஒடிசா தனது 90-வது நிறுவன தினத்தை ஏப்ரல் 1 அன்று 'உத்கல் தினம்' என்ற பெயரில் கொண்டாடுகிறது. 1936-ம் ஆண்டில் அப்போதைய பீகார், சென்னை மாகாணம் மற்றும் ஒருங்கிணைந்த வங்காளத்தின் சில பகுதிகளைப் பிரித்து, மொழி அடிப்படையில் 'ஒரிசா' உருவாக்கப்பட்ட தினம் இதுவாகும். அன்றிலிருந்து இந்த நாள் 'உத்கல் தினம்' எனக் கொண்டாடப்பட்டு வருகிறது. 2011-ல் இதன் பெயர் 'ஒடிசா' என மாற்றப்பட்டது. பேரரசர் அசோகர் அகிம்சைச் செய்தியைப் போதித்த இந்த நிலம், சுதந்திரப் போராட்டத்திலும் முக்கியப் பங்காற்றியது. பகவான் ஜெகந்நாதரின் இந்தப் புனித பூமியின் வரலாறு, இலக்கியம் மற்றும் இசையை அறிந்து இந்தியா பெருமிதம் கொள்கிறது...




"உத்கல் தின வாழ்த்துகள். நமது நாட்டின் முன்னேற்றத்தில் ஒடிசா, ஒடியா மக்கள் மற்றும் அவர்களின் கலாச்சாரம் ஆற்றி வரும் செழுமையான பங்கினை அங்கீகரிப்பதற்கான நாள் இது. வரும் ஆண்டுகளில் ஒடிசா மக்கள் நல்ல ஆரோக்கியத்துடனும் செழிப்புடனும் ஆசீர்வதிக்கப்படட்டும்."

– பிரதமர் நரேந்திர மோடி



NEW INDIA SAMACHAR
VOLUME 6, ISSUE 19 | APRIL 1-15, 2026

EDITOR IN CHIEF
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

CHIEF CONSULTING EDITOR
SANTOSH KUMAR

SENIOR ASST. CONSULTING EDITOR
PAWAN KUMAR

ASST. CONSULTING EDITORS
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

LANGUAGE EDITORS
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

SENIOR DESIGNER
PHOOL CHAND TIWARI

DESIGNERS
ABHAY GUPTA
SATYAM SINGH



**CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES**
https://newindiasamachar.pib.gov.in/news.aspx
TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

**Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'**

# உள்பக்கங்களில்...




**அட்டைப்பக்கக் கட்டுரை**

தேசியக் கடல்சார் தினத்தை (ஏப்ரல் 5) முன்னிட்டு, கடந்த 11 ஆண்டுகளில் உலகின் முன்னணிக் கடல்சார் வல்லரசுகளில் ஒன்றாக இந்தியா எவ்வாறு பிரம்மாண்டமாக முன்னேறியுள்ளது என்பதை ஆராய்வோம். இந்த முயற்சிகள் 2047-க்குள் கடல்சார் துறையில் சுமார் எட்டு டிரில்லியன் ரூபாய் முதலீடுகளை ஈர்க்கும் என்றும், சுமார் ஒரு கோடியே 50 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது... |12-27

**வளர்ச்சியின் புதிய யுகம்..**

இந்தியா அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறுகிறது

ஐடிவி நெட்வொர்க் நிறுவனத்தின் 'என்எக்ஸ்டி (NXT) உச்சிமாநாட்டில்' பிரதமர் மோடி நிகழ்த்திய உரை... |8-11



**செய்தித் துளிகள்:** | 4-5

**ஆளுமை: பாபு ஜெகஜீவன் ராம்**
பாகிஸ்தானுக்குப் பேரிடி கொடுத்த மனிதர்... | 17

**மத்திய அமைச்சரவையின் முக்கிய முடிவுகள்**
ஜேஜேஎம் 2.0 மற்றும் 3 முக்கியத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது... | 28-29

**தில்லி ஒரு புதிய யுகத்தின் வருகையைக் காண்கிறது**
ரூ.33,500 கோடி மதிப்பிலான திட்டங்களைப் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்... | 30-31

**ஹடோட்டி மக்களின் விருப்பங்களுக்கு ஊக்கம் அளித்தல்**
கோட்டா விமான நிலையத்திற்குப் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்... | 32-33

**கேரளம் மற்றும் தமிழ்நாட்டின் உட்கட்டமைப்புக்கு ஊக்கம்**
ரூ.16,450 கோடி மதிப்பிலான திட்டங்களைப் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்... | 34-35

**'பட்ஜெட்': மக்களின் எதிர்பார்ப்புகளை நனவாக்குதல்**
பட்ஜெட் குறித்து இணையம் வாயிலாக நடைபெற்ற மூன்றாவது மற்றும் நான்காவது கருத்தரங்கில் பிரதமர் நரேந்திர மோடி நிகழ்த்திய உரை... | 36-37

**பிஎம் முத்ரா, இ-நாம் மற்றும்**

**பொருளாதாரப் பாதுகாப்பின் வலுவான சுழற்சி**



பிஎம் முத்ரா, இ-நாம் , யுபிஐ ஆண்டு விழாக்கள் |38-40



**பஞ்சதீர்த்தம்:**
தலைசிறந்த தலைவரை நன்றியுடன் நாடு வணங்குகிறது

"பாபாசாகேப் டாக்டர் பீமராவ் அம்பேத்கரின் கொள்கைகளும் லட்சியங்களும், தற்சார்பு மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதை வலுப்படுத்தவும் விரைவுபடுத்தவும் உதவுகின்றன..." ஏப்ரல் 14 அன்று பாபாசாகேபின் 136-வது பிறந்தநாளில் பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு அஞ்சலி செலுத்துகிறார்.
| பக்கம்: 6

**Published:** Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
**Communication Address :** Room No-1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
**E-Mail : response-nis@pib.gov.in, RNI No. :** DELENG/2020/78811

## ஆசிரியர் மேசையிலிருந்து...

# கடலில் இருந்து வளம்: உலகளாவிய கடல்சார் தலைமைப் பொறுப்பை நோக்கி இந்தியா முன்னேறுகிறது

வாழ்த்துகள்,

இந்தியாவின் புகழ்பெற்ற கடல்சார் பாரம்பரியம் மிக விரிவான, வளமான வரலாற்றைக் கொண்டது. சோழர்கள் மற்றும் மராட்டியர்களின் காலங்களில், கடல்சார் வர்த்தகமும் கடற்படைத் திறனும் இந்தியாவின் செழுமையை மேம்படுத்தின. இந்த வரலாற்று மரபிலிருந்து ஊக்கம் பெற்று, இந்தியா இன்று தனது கடல்சார் துறையை நவீன வளர்ச்சியின் புதிய கட்டத்திற்கு இட்டுச் செல்கிறது. தோராயமாக 11,000 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரை மற்றும் உலகளாவிய கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் அமைந்துள்ள முக்கிய இடத்தையும் கொண்டுள்ள இந்தியா, அளப்பரிய ஆற்றலைக் கொண்டுள்ளது. 12 முக்கியத் துறைமுகங்கள் மற்றும் 217 இதர துறைமுகங்களைக் கொண்டுள்ள கடல்சார் போக்குவரத்து, இன்றும் இந்தியப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாகத் திகழ்கிறது.

இருப்பினும், சுமார் ஒரு தசாப்தத்திற்கு முன்பு வரை, இத்துறை பழமையான சட்டங்கள், குறைந்த திறன் மற்றும் மந்தமான உள்கட்டமைப்பு வளர்ச்சி ஆகியவற்றால் திணறி வந்தது. துறைமுகத் திறன், கப்பல் கட்டுதல், நீர்வழிப்பாதைகளின் விரிவாக்கம் ஆகியவற்றில் தேவையான கவனம் செலுத்தப்படாததால், நாட்டின் பரந்த கடல்சார் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் போனது. கடந்த 11 ஆண்டுகளில், இத்துறை குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டுள்ளது: உள்நாட்டிலேயே கப்பல்கள் கட்டும் பணி வேகமெடுத்துள்ளது, துறைமுகத் திறன் இரட்டிப்பாகியுள்ளது, கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்து செல்லும் நேரம் குறைந்துள்ளது. சாகர்மாலா திட்டம் துறைமுகங்களின் நவீனமயமாக்கலை இயக்குவதுடன், இணைப்பை மேம்படுத்தி, கடலோர சமூகங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. 'கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2030'-ன் கீழ், உலக நாடுகளுக்கு இணையாக இந்தியாவின் கடல்சார் மற்றும் கப்பல் கட்டும் துறையை முன்னிலைப்படுத்த மத்திய அரசு அயராது உழைத்து வருகிறது.

கடல் வழியாக சீரான வளர்ச்சியை நோக்கி இந்தியா முன்னேறி வருவதை இது குறிக்கிறது; எனவே, ஏப்ரல் 5-ம் தேதியான தேசியக் கடல்சார் தினத்தன்று, இந்தியாவின் கடல்சார் வலிமையின் மறுமலர்ச்சி இந்த இதழின் அட்டைப்பக்கக் கட்டுரையாக அமைந்துள்ளது.

ஆளுமைப் பகுதியில் பாபு ஜெகஜீவன் ராம் பற்றி வாசியுங்கள். ஏப்ரல் 14-ம் தேதி பாபாசாகேப் அம்பேத்கரின் பிறந்தநாளில் ஒரு நன்றியுள்ள தேசம் செலுத்தும் அஞ்சலி, மத்திய அமைச்சரவை முடிவுகள், பொருளாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளாக முத்ரா, இ-நாம், யுபிஐ, பிரதமர் நரேந்திர மோடியின் இருவார கால நிகழ்ச்சிகள் ஆகியவை பிற சிறப்பம்சங்களாகும்.

இந்த இதழின் உள்பக்கத்தில் ஏப்ரல் 1 அன்று கொண்டாடப்படும் 'உத்கல் தினம்' மற்றும் இதழின் கடைசிப் பக்கத்தில் நாட்டில் அதிகரித்து வரும் சிறுத்தைகளின் எண்ணிக்கை குறித்த செய்திகளும் இதழின் அங்கமாகும்.


***உங்கள் ஆலோசனைகளைத் தொடர்ந்து எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.***

(தீரேந்திர ஓஜா)

**இந்த இதழை இந்தி, ஆங்கிலம் மற்றும் 11 இதர மொழிகளில் வாசிக்கலாம்/ பதிவிறக்கம் செய்யலாம்.**

https://newindiasamachar.pib.gov.in/

# மின்னஞ்சல் பெட்டி






## மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு சிறந்த தகவல் ஆதாரம்

நியூ இந்தியா சமாச்சார் இதழ் மூலம் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளைப் பற்றிய புரிதல் கிடைக்கிறது. இது பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவதற்கு மதிப்புமிக்க உதவியாக அமைகிறது. ஒரு ஆசிரியராக, என்னைப் புதுப்பித்துக் கொள்ள இது ஓர் கருவியாக இருப்பதை நான் உணர்கிறேன். எங்கள் மாணவர்களையும் இதை வாசிக்க நாங்கள் ஊக்குவிக்கிறோம்; அவர்களும் ஒவ்வொரு புதிய இதழுக்காகவும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். நியூ இந்தியா சமாச்சார் குழு முழுமைக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

தனஞ்சய் குமார் யாதவ்
dhananjaybhu07@gmail.com

## அனைத்துத் துறைகளின் வளர்ச்சி குறித்த துல்லியமான தகவல்

நான் நியூ இந்தியா சமாச்சார் இதழை டிஜிட்டல் முறையில் பின்தொடர்கிறேன், ஒவ்வொரு கட்டுரையையும் மிகுந்த கவனத்துடன் படிக்கிறேன். முக்கிய நாளிதழ்களுடன் ஒப்பிடும்போது, இந்த இதழ் தனது வாசகர்களுக்குத் திட்டங்கள், உட்கட்டமைப்பு, முறைசாராத் துறைக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் இது போன்ற பல்வேறு தலைப்புகள் குறித்த விரிவான தகவல்களை வழங்குகிறது. இது மிகச்சிறந்த ஒன்றாக நான் கருதுகிறேன்; என்னைப் புதுப்பித்துக் கொள்ள இது பெரிதும் உதவுகிறது.

sourabh.iimc@gmail.com

## யுபிஎஸ்சி தேர்விற்குப் பயனுள்ளது; புத்தக வடிவில் கிடைக்க வேண்டும்

கடந்த ஓராண்டாக நான் நியூ இந்தியா சமாச்சார் இதழைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். தற்போதைய நிகழ்வுகள், பல்வேறு அரசுத் திட்டங்கள் மற்றும் புத்தொழில் முயற்சிகள் குறித்த தகவல்களைச் சேகரிக்க, இது எனது யுபிஎஸ்சி தேர்வுக்குத் தயாராக மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. எனது கருத்தின்படி, இந்த இதழ் அனைவருக்கும் புத்தக வடிவில் கிடைத்தால் மிகச்சிறப்பாக இருக்கும்.

kaluvakavyalu@gmail.com

## போட்டித் தேர்வுகளுக்கு முக்கியமானது

நியூ இந்தியா சமாச்சார் இதழ் பயனுள்ள மற்றும் நம்பகமான தகவல்களை வழங்குகிறது. மேலும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இதிலுள்ள கட்டுரைகள் மிகவும் பலனளிக்கின்றன. இதில் வெளியாகும் ஒவ்வொரு செய்தியும் தகவல் நிறைந்ததாக உள்ளது. குறிப்பாக, 'ஆளுமைகள்' பகுதியில் இடம்பெறும் தேசிய நாயகர்களின் பங்களிப்புகள் குறித்த செய்திகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக நான் கருதுகிறேன்.

prof.prema@gmail.com

## ஒவ்வொரு இதழிலும் புதிதாகக் கற்க ஏதோ ஒன்று இருக்கிறது

நியூ இந்தியா சமாச்சார் இதழின் ஒவ்வொரு இதழும் புதிதாகக் கற்க ஏதேனும் ஒன்றைத் தருகிறது. ஒவ்வொரு இதழும் இந்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவான தகவல்களை வழங்குகிறது. இந்த இதழின் மூலம், தற்போது நாடு முழுவதும் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து என்னால் உடனுக்குடன் தெரிந்துகொள்ள முடிகிறது. தேசபக்தி, சுற்றுச்சூழல் என எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு இதழும் இந்தத் தலைப்புகளில் புதிய தகவல்களை முன்வைக்கின்றன.

sjknews11@gmail.com

Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in




## பிரதமரின் விவசாயிகள் கவுரவிப்பு நிதி

### 22-வது தவணை விடுவிப்பு: 7 ஆண்டுகளில் விவசாயிகளின் கணக்குகளுக்கு 4.27 லட்சம் கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது

கடந்த 11 ஆண்டுகளாக, பிரதமர் மோடி தலைமையின் கீழ், நாட்டின் விவசாயிகளுக்கு ஒரு வலுவான பாதுகாப்புச் சுழற்சியை வழங்க மத்திய அரசு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. குறைந்தபட்ச ஆதரவு விலை குறைந்தவட்டியில் கடன், பயிர்க் காப்பீடு போன்ற நடவடிக்கைகள் மூலம் சர்வதேச நெருக்கடிகளுக்கு மத்தியிலும் விவசாயம் மற்றும் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளில், விவசாயிகள் குறைந்தபட்ச ஆதரவு விலையாக 20 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் பெற்றுள்ளனர். விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்தத் தொடர் முயற்சிகளின் தொடர்ச்சியாக, மார்ச் 13 அன்று, 9.32 கோடி விவசாயிகளின் வங்கி கணக்குகளில் 18,640 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை பிரதமரின் விவசாயிகள் கவுரவிப்பு நிதியின் கீழ் 22-வது தவணையாக வரவு வைக்கப்பட்டது. இந்த 22-வது தவணைப் பயனாளிகளில் 2.15 கோடி பேர் பெண் விவசாயிகள் ஆவர். உலகின் மிகப்பெரிய நேரடிப் பயன் பரிமாற்ற திட்டமாக உருவெடுத்துள்ள பிரதமரின் விவசாயிகள் கௌரவிப்பு நிதித் திட்டத்தின் கீழ், இதுவரை மொத்தம் ரூ. 4.27 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகை விவசாயிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஒவ்வொரு விவசாயக் குடும்பமும் ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் நிதியுதவியைப் பெறுகிறது, இது மூன்று சமமான தவணைகளாக வழங்கப்படுகிறது. இது குறித்துப் பிரதமர் மோடி கூறுகையில், "இன்று, பிரதமரின் விவசாயிகள் கௌரவிப்பு நிதித் திட்டம் நாட்டின் சிறு விவசாயிகளுக்கான சமூகப் பாதுகாப்பு வாகனமாக மாறியுள்ளது," என்றார்.

### மக்கள் தொகை கணக்கெடுப்பு-2027-க்கான சின்னங்கள் 'பிரகதி' (பெண்) மற்றும் 'விகாஸ்' (ஆண்) வெளியீடு

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா, இரண்டு கட்டங்களாக நடத்தப்பட உள்ள உலகின் மிகப்பெரிய 'மக்கள் தொகை கணக்கெடுப்பு-2027'-க்கான நான்கு டிஜிட்டல் கருவிகளைத் தொடங்கி வைத்து, அதற்கான சின்னங்களையும் வெளியிட்டார். 'பிரகதி', 'விகாஸ்' ஆகிய சின்னங்கள் நட்புணர்வு மற்றும் அணுகக்கூடிய அடையாளங்களாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 2047-ம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் தேசிய உறுதிமொழியை நிறைவேற்றுவதில் ஆண்களும் பெண்களும் சமமான பங்களிப்பை வழங்குவதன் அடையாளங்களாக இந்தச் சின்னங்கள் திகழ்கின்றன. முதல் முறையாக, மக்கள் தொகை கணக்கெடுப்பு டிஜிட்டல் முறையில் நடத்தப்பட உள்ளது. கூடுதலாக, முதல் முறையாக சுய-கணக்கெடுப்பு முறையும் வழங்கப்படுகிறது. கணக்கெடுப்பின் முதற்கட்டமாக, வீடுகள் பட்டியல் மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்பு 2026 ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரை நடத்தப்படும்; இரண்டாம் கட்டமாக, மக்கள் தொகை கணக்கெடுப்பு இந்தியா முழுவதும் 2027 பிப்ரவரியில் மேற்கொள்ளப்படும்.



### நொய்டா சர்வதேச விமான நிலையம் உரிமம் பெற்றது

உத்தரப் பிரதேசத்தின் கௌதம புத்தா நகர் மாவட்டம், ஜேவாரில் அமைந்துள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்கு, யமுனா இன்டர்நேஷனல் ஏர்போர்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு இந்திய சிவில் விமானப் போக்குவரத்துத் தலைமை இயக்குநரகம் விமான நிலைய உரிமத்தை வழங்கியுள்ளது. இந்த விமான நிலையம் 'பொதுப் பயன்பாடு' பிரிவின் கீழ் 24 மணி நேரமும், அனைத்து வகையான வானிலையிலும் இயங்குவதற்கு அங்கீகாரம் பெற்றுள்ளது.

இந்த சர்வதேச விமான நிலையம் அரசு தனியார் பங்களிப்பு மாதிரியின் கீழ் உருவாக்கப்பட்டு வருகிறது. நொய்டா சர்வதேச விமான நிலையம் நான்கு கட்டங்களாகப் பன்முகத்தன்மை கொண்ட சரக்கு முனையமாக மேம்படுத்தப்படுகிறது. முதற்கட்டத்தில், ஒரு ஓடுபாதையும், ஒரு முனையமும் கட்டப்பட்டுள்ளன. தொடக்கக் கட்டத்தில், ஆண்டுக்கு சுமார் 1.2 கோடி பயணிகளைக் கையாளும் திறனை இந்த விமான நிலையம் கொண்டிருக்கும். அனைத்துக் கட்டங்களும் நிறைவடைந்தவுடன், ஆண்டுக்கு சுமார் 7 கோடி பயணிகளைக் கையாளும் திறன் கொண்டதாக இது மாறும். இதன் விளைவாக, இது தேசியத் தலைநகர் பிராந்தியம் மற்றும் மேற்கு உத்தரப் பிரதேசத்திற்கான ஒரு முக்கிய விமானப் போக்குவரத்து மையமாக இது உருவெடுக்கும்.






## பத்ம விருதுகள்– 2027–க்கு பரிந்துரை செய்யுங்கள்

பத்ம விருதுகள்–2027–க்குப் பரிந்துரை செய்வது தொடங்கியுள்ளது. இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க 2026 ஜூலை 31 கடைசித் தேதியாகும். இந்தப் பரிந்துரைகள் அல்லது பரிந்துரைக் கடிதங்கள் பிரத்யேகமாக தேசிய விருதுகள் இணையதளம் (https://awards.gov.in) வழியாக மட்டுமே ஆன்லைனில் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டின் மிக உயரிய குடிமை விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகள், 'பத்ம விபூஷன்', 'பத்ம பூஷன்', 'பத்ம ஸ்ரீ' ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது.

கலை, இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப் பணி, அறிவியல் மற்றும் பொறியியல், பொது நலன், சிவில் சேவை, வர்த்தகம் மற்றும் தொழில் உட்பட பல துறைகளில் குறிப்பிடத்தக்க மற்றும் அசாதாரண சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகளைத் தவிர, பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் உட்பட அரசு ஊழியர்கள் பத்ம விருதுகளுக்குத் தகுதியற்றவர்கள்.
பத்ம விருதுகளை 'மக்களின் பத்ம' விருதுகளாக மாற்றுவதில் உறுதியாக உள்ள மத்திய அரசு, சுய–பரிந்துரைகள் உட்பட அனைத்துக் குடிமக்களையும் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இந்த விருதுகள் குறித்த தகவல்கள் மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணையதளம் (https://mha.gov.in) மற்றும் பத்ம விருதுகள் இணையதளத்திலும் (https://padmaawards.gov.in) கிடைக்கின்றன.

## கந்தக அமில உற்பத்தியில் இந்தியா தற்சார்பு அடையத் தயாராகிறது

ஒடிசாவின் பாரதீப்பில் மார்ச் 6 அன்று, 'இப்கோ' (IFFCO) கந்தக அமில ஆலையின் 3–வது கட்டத்தை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார். இந்த ஆலை செயல்பாட்டுக்கு வந்ததன் மூலம், வரும் நாட்களில் கந்தக அமில உற்பத்தியில் ஒடிசா மற்றும் ஒட்டுமொத்த தேசத்தையும் தற்சார்பு அடையச் செய்ய இப்கோ மற்றும் கிரிப்கோ இணைந்து செயல்படும். மத்திய உள்துறை அமைச்சகத்தின் சார்பில், ஒடிசாவில் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் அடிக்கல் நாட்டு விழா, அதன் தற்காலிக வளாகத் திறப்பு விழாவும் நடைபெற்றது. மத்திய அரசின் இந்த முன்முயற்சிகள் ஒடிசாவில் உள்ள தடய அறிவியல் மாணவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்கும்; படிப்பை முடித்தவுடன் உடனடி வேலைவாய்ப்பை அவர்களுக்கு உறுதி செய்யும் வேலை சார்ந்த படிப்புகளை வழங்குகிறது. ஒரே நாளில், மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் 3 திட்டங்கள், கூட்டுறவு அமைச்சகத்தின் கீழ் 4 திட்டங்கள் மற்றும் ஒடிசா அரசின் 173 திட்டங்களுக்கு உள்துறை அமைச்சர் அடிக்கல் நாட்டியும், நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்தும் சிறப்பித்தார்.



## 'தூய நீர் மேலாண்மை இயக்க கிராம அடையாள எண்' அறிமுகம்

மத்திய நீர்வளத் துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல், "தூய நீர் மேலாண்மை இயக்கத்தின் கீழ் கிராமங்களுக்கு அடையாள எண்' வழங்கும் முன்முயற்சியைத் தொடங்கி வைத்தார். இந்த தனித்துவமான அடையாள எண் மூலம், கிராமப்புற குழாய்கள் வழியாக வழங்கப்படும் நீர் விநியோகம் டிஜிட்டல் முறையில் வரைபடமாக்கப்படும். நாட்டில் முதல் முறையாக, ஒவ்வொரு கிராமப்புற குடிநீர் திட்டத்திற்கும் டிஜிட்டல் அடையாளம் வழங்கப்படுகிறது; இன்றுவரை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முழுவதும் 1.64 லட்சம் தூய நீர் மேலாண்மை இயக்க கிராம அடையாள எண்கள்' உருவாக்கப்பட்டுள்ளன. இவை 67,000' பாரத்தூய நீர் மேலாண்மை இயக்க அடையாள எண்களுடன்' இணைக்கப்பட்டுள்ளன. இது கிராமப்புற நீர் சேவை வழங்கலை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான டிஜிட்டல் முன்முயற்சியாகும். இது வெளிப்படைத்தன்மை மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்த உதவும். வீடுகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை 2028 டிசம்பர் வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதுடன், அதன் வரவுசெலவுத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டை ரூ.8.69 லட்சம் கோடியாக உயர்த்தியுள்ளது.





பீம் ஜன்மபூமி
மோ, மத்தியப் பிரதேசம்



சிக்ஷா பூமி
அம்பேத்கர் நினைவகம்,
லண்டன்



மகாபரிநிர்வாண் பூமி
அலிபூர் சாலை, புதுதில்லி





தீக்ஷா பூமி,
நாக்பூர், மகாராஷ்டிரா



சைத்ய பூமி
மும்பை, மகாராஷ்டிரா

# பஞ்சதீர்த்தம்:

## ஒரு மாபெரும் தலைவருக்கு நன்றியுணர்வுடன் நாடு மரியாதை செலுத்துகிறது

**தற்சார்புள்ள, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பாபாசாகேப் டாக்டர் பீமாராவ் அம்பேத்கரின் கொள்கைகளும், கோட்பாடுகளும் வலிமையான ஆற்றலை வழங்கும்... பிரதமர் நரேந்திர மோடி கூறியது போல், அம்பேத்கரின் 136-வது பிறந்தநாளான ஏப்ரல் 14 அன்று நன்றியுணர்வுடன் பாபா சாகேபிற்கு இந்தியா மரியாதை செலுத்துகிறது...**

"பாபா சாகேப், மனிதகுலத்தின் நலனுக்குத் தீவிரமாகக் குரல் கொடுத்தார். மனிதாபிமானமற்ற செயல்பாடுகளின் அனைத்து வகைகளையும் அவர் நிராகரித்தார், அவற்றைச் சீர் செய்ய முயன்றார், எப்போதுமே அமைப்பு ரீதியான வழிமுறைகளின்படி செயல்பட்டார். பாபா சாகேப் நமக்கு விடுத்த செய்தி என்ன? சமுதாயத்திடம் அவர் கூறியது ஒன்றே ஒன்றுதான்: 'சகோதரர்களே, கல்வியறிவு பெறுங்கள்...' கல்வி கற்றால், உலகை உற்று நோக்கி, தன்னம்பிக்கையுடன் உங்களால் பேச முடியும். ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பது அவரது இரண்டாவது தாரக மந்திரம்... மூன்றாவது, மனித சமூகத்திற்கு ஆதரவளித்து, மனிதாபிமானமற்ற செயல்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தல் என்பதாகும். இந்த மூன்று தாரக மந்திரங்கள், இன்றளவும் நம்மைத் தொடர்ந்து ஊக்குவிப்பதுடன், நமக்கு வலிமை அளித்துக்கொண்டே இருக்கின்றன. தமது பணிகளை மேற்கொண்ட போது பாபா சாகேப் அம்பேத்கர் கொண்டிருந்த மனப்பான்மை, மிகத் தூய்மையானதாக இருந்தது. நாட்டிற்கான அர்ப்பணிப்பும், சமூகத்திற்கான உறுதிப்பாடும் நிறைந்ததாக அது அமைந்திருந்தது. எனவே இதுதான் நமது உறுதிப்பாடு: தலித்துகள், ஒடுக்கப்பட்டவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்கள், நலிவடைந்தவர்கள், ஏழைகள், பழங்குடி மக்கள், கிராமங்களில் வசிப்பவர்கள், குடிசைகளில் வாழ்பவர்கள், கல்வியறிவின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற பிரிவினரின் முன்னேற்றத்திற்குப் பாடுபட நாம் விரும்பினால், பாபா சாகேப் அம்பேத்கர் எப்போதும் நமக்கு எழுச்சியூட்டுவார்.

பாபா சாகேபின் சீரிய பங்களிப்புகளை தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் அரசு பிரதானமாக வெளிப்படுத்தி வருகிறது. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பாபா சாகேப் வசித்த இடங்கள் அனைத்தும் பஞ்ச தீர்த்த தலங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன. அவர் பிறந்த ஊரான மோ, நாக்பூரில் தீக்ஷா பூமி, மும்பையில் சைத்ய பூமி, தமது இறுதி நாட்களை அம்பேத்கர் தில்லியில் கழித்த இடம் மற்றும் லண்டனில் உள்ள அம்பேத்கர் நினைவகம் ஆகிய பஞ்ச தீர்த்த தலங்கள், எதிர்கால தலைமுறையினரைத் தொடர்ந்து ஊக்குவிக்கும். நாட்டு மக்களின் சார்பாக, பாரத ரத்னா பாபா சாகேப் அம்பேத்கரின் பிறந்தநாளில், அவருக்கு மனமார்ந்த மரியாதையைச் செலுத்துகிறேன். அவரது உத்வேகம் தான், இன்று சமூக நீதியின் கனவை நிறைவேற்றுவதில் நாட்டின் அர்ப்பணிப்பை நிலைத்திருக்கச் செய்கிறது. தன்னிறைவான, வளர்ச்சியடைந்த இந்தியாவைக் கட்டமைக்கும் முயற்சியை அவரது கொள்கைகளும், கோட்பாடுகளும் துரிதப்படுத்தி, செயல்பாடுகளுக்கு வலிமை சேர்க்கின்றன.



# 1971 போரில், பாகிஸ்தானுக்குத் தக்க பதிலடி கொடுத்தவர்

தோற்றம்: 1908 ஏப்ரல் 5
மறைவு: 1986 ஜூலை 6

**இந்திய அரசியலில் முக்கிய ஆளுமையாக விளங்கிய பாபு ஜெகஜீவன் ராம், அனைவரையும் உள்ளடக்கிய, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கத் தமது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். உணவு மற்றும் வேளாண் துறை அமைச்சராக, இந்தியாவில் பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு அவர் வித்திட்டார். வங்கதேச உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்த 1971 போரில், பாதுகாப்புத்துறை அமைச்சராக இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். சமூக நீதிக்கான அவரது உறுதிப்பாடு, எப்போதும் உத்வேகத்தின் ஆதாரமாக விளங்கும்.**

மகத்தான சுதந்திரப் போராட்ட வீரரும், தேசியத் தலைவருமான பாபு ஜெகஜீவன் ராம், பிற்படுத்தப்பட்ட மக்களின் மேன்மைக்காக அயராது பாடுபட்டார். பீகார் மாநிலத்தின் போஜ்பூரில் 1908 ஏப்ரல் 5 அன்று அவர் பிறந்தார். ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டிருந்த தனது தந்தையின் அறிவாற்றலையும், மனித சமூகத்திற்கான மாண்புகளையும் ஜெகஜீவன் ராம் பெற்றிருந்தார். பாபுஜி என்று அன்புடன் அழைக்கப்பட்ட ஜெகஜீவன் ராம், தலித்துகளின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் உழைத்தார். மகாத்மா காந்தியைத் தனது முன்மாதிரியாகக் கொண்டிருந்த பாபு ஜெகஜீவன் ராம், 1940 டிசம்பர் 10 அன்று சிறையில் அடைக்கப்பட்டார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றதற்காக 1942 ஆகஸ்ட் 19 அன்று மீண்டும் கைது செய்யப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையான பின், 1946-ல் இடைக்கால மத்திய அரசில் இளம் அமைச்சராக அவர் பதவியேற்றார். இந்தியாவின் அரசியல் நிர்ணய சபையிலும் அவர் உறுப்பினராக இருந்தார்.

முன்னதாக, 1939-ல் தனது 28-வது வயதில் பீகார் சட்ட மேலவையின் நியமன உறுப்பினராகப் பணியாற்றினார். மத்திய அமைச்சராக 35 ஆண்டுகள் அவர் பதவி வகித்தார். இதன் மூலம், மிக நீண்ட காலம் அமைச்சராகப் பணியாற்றிய பெருமையை அவர் பெற்றார். இந்தக் காலகட்டத்தில் முக்கியமான துறைகளுக்கு அவர் பொறுப்பு வகித்தார். ஏராளமான குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களை அவர் கொண்டு வந்தார். உணவு மற்றும் வேளாண் துறை அமைச்சராக, இந்தியாவில் 'பசுமைப் புரட்சியின்' வெற்றிக்கு அவர் வித்திட்டார். பாதுகாப்புத்துறை அமைச்சராக, வங்கதேச உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்த 1971 போரில், இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். ஒரு நிர்வாகியாக, இந்தியாவிற்கு அவர் ஆற்றிய சேவைகள், ஈடு இணையற்றவையாக இருந்தன. இந்த மாபெரும் தேசியத் தலைவர், 1986 ஜூலை 6 அன்று மறைந்தார்.

முன்னாள் துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன் ராமின் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு மரியாதை செலுத்தி, 2025 ஏப்ரல் 5 அன்று பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது: "ஏழைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்கான அவரது வாழ்நாள் போராட்டம், எப்போதும் உத்வேகத்தின் ஆதாரமாக இருக்கும். பாபு ஜெகஜீவன் ராம், ஏழைகளின் நலனுக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார். நாட்டிற்கு அவர் பல ஆண்டுகள் சேவையாற்றினார். ஒரு வலிமையான, ஜனநாயக இந்தியாவை உருவாக்க அவர் விரும்பினார். பாகிஸ்தானுக்கு நாம் கடுமையான பதிலடி கொடுத்த போது, பாபுஜி நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக இருந்தார்.

அவசரநிலைக்கு எதிராகக் குரல் கொடுத்த முதல் காங்கிரஸ் தலைவராக அவர் விளங்கினார். மக்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்த அந்தக் கடினமான காலகட்டத்தில், அவர் ஒரு வலிமையின் குரலாக வெளிப்பட்டு, அச்சப்பட வேண்டாம் என்று மக்களுக்கு தைரியம் கூறினார்.

வளர்ச்சியின் அடுத்த நிலையில்....

# இந்தியா அடுத்த நிலைக்கு முன்னேறுகிறது

**இந்திய சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தில், தண்டி யாத்திரை ஒரு முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த வரலாற்று நிகழ்விலிருந்து ஊக்கம் பெற்று, கடந்த 11 ஆண்டுகளில் வளர்ச்சிக்கான புதிய அத்தியாயத்தை இந்தியா உருவாக்கியுள்ளது. இந்த வளர்ச்சிப் பயணம் இப்போது அடுத்த கட்டத்திற்கு முன்னேறுகிறது. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற உன்னதமான இலக்கை அடைவதுதான் அந்தப் பயணம். 2047-க்குள் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை மாற்றும் தேசிய உறுதிப்பாட்டை அடைவதற்கான செயல்திட்டம் பற்றி, ஐ டிவி நெட்வொர்க் நிறுவனம் சார்பாக நடத்தப்பட்ட என்எக்ஸ்டி உச்சிமாநாட்டில் பங்கேற்றுப் பேசுகையில், பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார்.**

## ஒரே இலக்கு.... வளர்ச்சியடைந்த இந்தியா

1930 மார்ச் 12 அன்று, சபர்மதி ஆசிரமத்தில் இருந்து, மகாத்மா காந்தி, தண்டி யாத்திரையைத் தொடங்கினார். இந்த நிகழ்வு, இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இந்த இயக்கம் இந்திய விடுதலை என்ற ஒற்றை இலக்கை நோக்கி நாட்டின் ஒவ்வொரு மூலையையும் இணைத்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்வின் நூற்றாண்டு நெருங்கும் வேளையில், இந்திய மக்கள் ஒரு புதிய பயணத்தை மீண்டும் தொடங்கியிருக்கின்றனர். இதுதான், 'வளர்ச்சியடைந்த இந்தியாவை' நோக்கியப் பயணம். வளர்ச்சியடைந்த பாரதம் என்பதுதான் நமது ஒரே இலக்கு; ஒரே நோக்கம்.

## சவால்களுக்கு இடையேயும் முன்னேறும் ஒரு நாடு

கடந்த காலங்களைப் போல் அல்லாமல், இந்த 21-வது நூற்றாண்டு முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. ஒருபுறம் போரின் பேரழிவுகள் அரங்கேறி வருவதுடன், விநியோகச் சங்கிலிகள் மீண்டும் சீர்குலைகின்றன, ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்களின் முக்கியத்துவம் கேள்விக்குறியாகிறது. இத்தகைய காலகட்டத்தில், மோசமான சூழ்நிலைகளுக்கு இடையேயும் இந்தியா தொடர்ந்து முன்னேறுகிறது.

ஒரு நாடு, அதன் சவால்களை எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதுதான் அதன் வளர்ச்சியின் முக்கிய அடித்தளமாக அமைகிறது. அண்மையில், கோவிட் 19 பேரழிவை நாம் சந்தித்தோம், அதைத்தொடர்ந்து ரஷ்யா-உக்ரைன் போரால் ஏற்பட்ட நெருக்கடியை எதிர்கொண்டோம். தற்போது மற்றொரு மிகப்பெரிய போர் நடக்கிறது.




### இந்தியாவுடன் இணைவதைத் தவிர்க்க முடியாது...

*சமீபத்தில் ஃபின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் இந்தியாவிற்கு வந்திருந்தார். உலக நாடுகளின் பாதையை இனி உலகளாவிய தெற்கு நாடுகள் வரையறுக்கும் என்றும், அந்தத் திசையை வடிவமைக்கும் மாபெரும் ஒற்றை சக்தியாக இந்தியா விளங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*அடுத்த 30 ஆண்டுகளில் உலக நாடுகளின் பொருளாதார ஈர்ப்பு விசை எதை மையமாகக் கொண்டு நகர்கிறதோ, அதன் பெயர் இந்தியா என்று இதற்கு முன் இந்தியா வந்திருந்த கனடா பிரதமர் மார்க் கார்னியும் கூறியிருந்தார்.*

*உலகின் மிக சவாலான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் கூட இந்தியா ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக உருவாகியுள்ளது என்று ஃபிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோனும் பாராட்டினார். தொழில்நுட்பம், பொருளாதாரத் துறைகளைச் சேர்ந்த சர்வதேசத் தலைவர்கள் வெளியிடும் அறிக்கைகளின் சாராம்சத்தை ஆராய்ந்தால் ஒரு தனித்துவமான உணர்வு புலப்படுகிறது: நீங்கள் எதிர்காலத்தின் ஓர் அங்கமாக இருக்க விரும்பினால், நீங்கள் இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டும்; நீங்கள் இந்தியாவில் இருக்க வேண்டும்.*

பிரதமரின் முழு விவரங்களையும் அறிய இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.





இந்த மோதல், ஒட்டுமொத்த உலகையும் மிக மோசமான எரிசக்தி நெருக்கடிக்குத் தள்ளியுள்ளது. ஒரு நெருக்கடியான காலகட்டம் என்பது, தேசத்திற்கே சோதனையான தருணம். இந்த நெருக்கடியை எதிர்கொள்ள மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. பல்வேறு நிலைகளில் அரசு முயற்சி செய்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இந்தப் பிரச்சனை குறித்து அண்மையில் நான் விவாதித்தேன். விநியோகத் தொடர்களில் எழுந்துள்ள இடர்களை சமாளிக்கவும் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அமைதியாகவும், பொறுமையாகவும் நிலைமையைக் கையாள வேண்டும். பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி, குடிமக்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலம், நமது இலக்கை நோக்கி முன்னேற வேண்டும். இதில் அனைவரின் பங்களிப்பும் அவசியமாகிறது.

சீர்திருத்தங்களின் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறுதல்

"அடுத்த தலைமுறை சீர்திருத்தங்களை" இந்தியா இன்று மேற்கொண்டு வருகிறது. "சீர்திருத்த எக்ஸ்பிரஸ்"–ல் நாடு பயணிக்கிறது. ஒரு காலத்தில் இந்தியாவில் சாத்தியம் இல்லை என்று கருதப்பட்ட பணிகளையும், தீர்வுகளையும் நாடு இன்று துல்லியமாக மேற்கொள்கிறது.

- சட்டப்பிரிவு 370–ஐ ரத்து செய்வது இயலாத காரியம் என்று ஒரு காலத்தில் பரவலாக சொல்லப்பட்டது; ஆனால், இன்று, ஜம்மு காஷ்மீரில் 370–வது பிரிவு முற்றிலும் தகர்க்கப்பட்டுள்ளது.
- நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் வங்கி அமைப்பு முறையுடன் இணைப்பது சாத்தியமற்றதாகக் கருதப்பட்டது; இன்று சுமார் 50 கோடி (500 மில்லியன்) மக்களுக்கு வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.
- முத்தலாக் தடைச் சட்டமும் இயலாததாகவே கருதப்பட்டது; இன்று, அநீதியிலிருந்து நமது இஸ்லாமிய சகோதரிகள் விடுதலை பெற்றுள்ளனர்.
- மக்களவையிலும், மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்குவதும் சாத்தியமற்றதாகக் கருதப்பட்டது; இன்று, இதை நிறைவேற்ற சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

## எரிசக்தித் துறையில், தன்னிறைவு




- சிலிண்டரில் நிரப்பும் திறன் 11 ஆண்டுகளில் இரட்டிப்பானது; விநியோக மையங்களின் எண்ணிக்கை 13,000–லிருந்து 25,000 ஆக உயர்ந்தது.
- 2014–ல் 4 திரவ இயற்கை எரிவாயு மையங்கள் இயங்கின; இந்த எண்ணிக்கை தற்போது இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.
- சுமார் 3,500 கிலோமீட்டராக இருந்த குழாய் மூலம் வழங்கப்படும் எரிவாயு இணைப்பு, தற்போது 10,000 கிலோமீட்டராக அதிகரித்துள்ளது.
- சமையல் எரிவாயு (LPG) தேவையில் 60% இறக்குமதி செய்யப்படுகிறது; முக்கிய துறைமுகங்களில் உள்ள இறக்குமதி முனையங்களின் திறன் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

### குழாய் மூலம் வழங்கப்படும் எரிவாயு...


- 2014–க்கு முன் 2.5 முதல் 2.6 மில்லியன் குடும்பங்கள் மட்டுமே குழாய் மூலம் வழங்கப்படும் எரிவாயு இணைப்பைப் பெற்றிருந்தன; இன்று இந்த எண்ணிக்கை 12.5 மில்லியனைக் கடந்துள்ளது.
- 2014–ல் இயற்கை எரிவாயுவில் இயங்கும் வாகனங்களின் எண்ணிக்கை 1 மில்லியனாக இருந்தது; தற்போது இது சுமார் 7 மில்லியனாக பதிவாகியுள்ளது.
- கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் 600 மாவட்டங்களில் நகர எரிவாயு விநியோக இணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.



## பெட்ரோலில் எத்தனால் கலவையும், கையிருப்புத் திறனும்

- 2014-க்கு முன் இந்தியா குறைவான இருப்புத் திறனையே கொண்டிருந்தது. தற்போது இது 5 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. இந்தத் திறனை மேலும் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- உலகின் மிகப்பெரிய பெட்ரோலியப் பொருட்கள் சுத்திகரிப்பு மையங்களில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. கடந்த தசாப்தத்தில், சுத்திகரிப்புத் திறன் ஆண்டுதோறும் 40 மில்லியன் டன்னுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- பெட்ரோல் மீதான சார்பைக் குறைப்பதற்காக, எத்தனால், உயிரி எரிபொருட்களின் பயன்பாடு ஊக்குவிக்கப்படுகிறது

**நாட்டில் எத்தனால் கலவையின் திறன்**




- இதுபோன்ற முன்முயற்சிகளை இந்தியா மேற்கொள்ளாமல் இருந்திருந்தால், கடந்த 11 ஆண்டுகளில் வெளிநாடுகளில் இருந்து கூடுதலாக சுமார் 180 மில்லியன் பீப்பாய் எண்ணெய் இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும்.

ஆண்டுதோறும் சுமார் **45** மில்லியன் கச்சா எண்ணெய் பீப்பாய்கள் நமது எத்தனால் உற்பத்தித் திறனால் இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ **1.5** லட்சம் கோடி ரூபாய் இதன் மூலம் மட்டுமே சேமிக்கப்பட்டுள்ளது.



### ரயில் பாதைகளின் மின்மயமாக்கல்

**அகல ரயில் பாதை நெட்வொர்க் மின்மயமாக்கல்**




- 2024-25-ல் மட்டும், இந்திய ரயில்வே ஏறத்தாழ 1.8 பில்லியன் லிட்டர் டீசலை சேமித்துள்ளது.
- மின்மயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்காவிட்டால், இந்த அளவு டீசலை உற்பத்தி செய்ய கூடுதல் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டியிருந்திருக்கும்.

- சந்திரனுக்கான பயணம், செமிகண்டக்டர் இயக்கம், குவாண்டம் இயக்கம் போன்ற முன்முயற்சிகள், அடுத்தத் தலைமுறை தொழில்நுட்பங்களை நோக்கி இந்தியா முன்னேற ஊக்குவிக்கின்றன.

### போர் விளைவுகளால் ஏற்படும் பாதிப்புகள் இந்தியாவைத் தாக்காமல் இருப்பதை உறுதி செய்தல்.

- ரஷ்யா-உக்ரைன் மோதல் வலுவடைந்த போது, சர்வதேச யூரியா விலை மூட்டை ஒன்றுக்கு 3000 ரூபாய் வரை இருந்தது. விவசாயிகளுக்கு இது 300 ரூபாய்க்கு விற்கப்படுவதை அரசு உறுதி செய்தது.
- தற்போது நடைபெறும் போரின் தாக்கம் குடிமக்களின் வாழ்க்கையில் குறைவாக இருப்பதை உறுதி செய்ய, அரசு இம்முறையும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

### முன்னேற விரும்பும் மாவட்டங்களில் சிறப்பு இயக்கங்கள்

வளர்ச்சிக்கான போட்டியில் பின்தங்கும் நிலையில் உள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றையும் நிர்வாகத்தில் அரசு ஒருங்கிணைத்துள்ளது. இந்தப் பகுதிகளில் வீடுகள், சாலைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட முக்கிய உள்கட்டமைப்புகளுக்கு உறுதி செய்ய, முன்னேற விரும்பும் மாவட்டங்கள் திட்டம், முன்னேற விரும்பும் வட்டாரங்கள் திட்டம், பிரதமரின் ஜன்மன் திட்டம் போன்ற சிறப்பு இயக்கங்கள் தீவிரமாக செயல்படுத்தப்படுகின்றன.

### நக்சல் தீவிரவாதம்

2013-ல் 180-க்கும் அதிகமான மாவட்டங்கள் நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தன; இன்று இந்த எண்ணிக்கை ஒற்றை இலக்கமாக சரிந்துள்ளது. இதன் விளைவாக, ஒரு காலத்தில் பயத்தின் நிழலில் வாழும் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட பகுதிகள்,

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் 40 மடங்கு உயர்வு

- தற்போது நாட்டின் மொத்த எரிசக்தி உற்பத்தியில் பாதி அளவு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் கிடைக்கிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் தற்போது **250** ஜிகாவாட்டைக் கடந்துள்ளது

### இந்தியாவின் சூரிய மின்சக்தித் திறன்




- வீட்டுப் பயன்பாட்டிற்கு எரிவாயுவை விட மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வீட்டுக்கூரை, 'பிரதமரின் சூரிய சக்தி: இலவச மின்சாரத் திட்டம்' அறிமுகம் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், இதுவரை ஏறத்தாழ 3 மில்லியன் வீடுகளில் கூரை மீது சூரிய மின்சக்தி அமைப்புமுறைகள் நிறுவப்பட்டுள்ளன.

- கோபர்தன் திட்டத்தின் கீழ் அழுத்தப்பட்ட உயிரி எரிவாயுவின் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது நாள் வரை நாடு முழுவதும் சுமார் 100 ஆலைகள் செயல்படுகின்றன. மேலும், கூடுதலாக 600 ஆலைகளை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



தற்போது வளர்ச்சிக்கான புதிய உத்வேகத்துடன் துடிப்பாக இயங்குகின்றன.

### இந்தியா, கனவுகளை நனவாக்குகிறது...

இன்றைய இந்தியா, கனவு மட்டுமே காண்பதில்லை, அதை நிறைவேற்றவும் செய்கிறது. அதனால்தான், "இந்தியா வளர்ச்சியடைவது மட்டுமின்றி, அடுத்த கட்டத்திற்கும் முன்னேறுகிறது", என்று உலக நாடுகள் கூறுகின்றன. நாம் இணைந்து செயல்பட்டால், நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நாட்டின் திறன் வலுவடைகிறது என்பதை கொவிட்–19 பெருந்தொற்றின் போது நாம் உணர்ந்திருக்கிறோம். நாடு தற்போது மற்றொரு சவாலை எதிர்கொள்கிறது. எனவே தேச நலனுக்கு முன்னுரிமை அளித்து, நமது கடமைகளை நிறைவேற்றி, அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்.

### வளர்ச்சியின் அடுத்த நிலை...

தற்போது நாடு அடுத்தத் தலைமுறை டிஜிட்டல் உள்கட்டமைப்பை நோக்கி வேகமாக முன்னேறுகிறது. யுபிஐ டிஜிட்டல் பரிவர்த்தனைகளை அடுத்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. நிகழ்நேர டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் இந்தியா இன்று உலகின் அதிவேக நாடாக மாறியுள்ளது. இந்தியா தற்போது முன்னேறி வரும் வேகத்தைத் தடுப்பது, சாத்தியமற்றதாக உள்ளது. 1.4 பில்லியன் இந்தியர்களின் லட்சியங்கள், தற்போது அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது. ஒரு கனவு நிறைவேறும் போது, புதிய கனவுகளும், புதிய லட்சியங்களும் உதயமாகும். 1.4 பில்லியன் இந்தியர்களின் நம்பிக்கைகளும், லட்சியங்களும் நிறைவேறும் என்பதை நான் அறிவேன், ஒவ்வொரு துறையிலும் இந்தியா தற்சார்பு அடைவதுடன், அனைத்துச் சூழ்நிலைகளிலும் ஒரு வளர்ச்சியடைந்த நாடாக உருவாகும். ●

அட்டைப்பக்கக் கட்டுரை

**தேசியக் கடல்சார்**

— தின சிறப்புக் கட்டுரை —



# இந்தியாவின் கடல்சார் ஆற்றலின் மறுமலர்ச்சி



**இந்தியா ஒரு காலத்தில் உலகின் மிகவும் செழிப்பான, சக்திவாய்ந்த நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. தனது வலுவான கடல்சார் இருப்பின் காரணமாகவே இது சாத்தியமானது. இருப்பினும், சுதந்திரத்திற்குப் பின்னர் நீண்ட காலமாக, இந்தத் துறையின் மகத்தான ஆற்றலுக்குத் தேவையான கவனம் செலுத்தப்படவில்லை. தற்போது, மாறிவரும் உலகச் சூழலில், புகழ்பெற்ற கடல்சார் வரலாற்றால் ஈர்க்கப்பட்டு, ஒரு புதிய இந்தியா முன்னேறிச் செல்கிறது. நவீனத் துறைமுகங்களின் மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட கடல்சார் இணைப்பு, அதிநவீன உள்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம், நாடு கடல்சார் துறைக்குப் புதிய ஆற்றலை ஊட்டி வருகிறது. இதன் மூலம், இந்தியா வர்த்தகம் மற்றும் தொழில்துறை வளர்ச்சியை விரைவுபடுத்துவது மட்டுமின்றி, தேசியப் பாதுகாப்பு, உலகளாவிய போட்டித்திறன், தொலைநோக்குத் தற்சார்பு ஆகியவற்றுக்கும் ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கிறது.**

தேசியக் கடல்சார் தினத்தை (ஏப்ரல் 5) முன்னிட்டு, உலகின் முன்னணி கடல்சார் சக்திகளில் ஒன்றாக மாறுவதற்காகக் கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா எவ்வாறு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை நாம் அறிந்து கொள்வோம். இந்த முயற்சிகள், 2047-க்குள் கடல்சார் துறையில் சுமார் 8 டிரில்லியன் ரூபாய் முதலீட்டைத் தூண்டி, சுமார் 15 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனது 'கடல்சார் அமிர்த காலம்' தொலைநோக்குப் பார்வையுடன், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிப் புதிய இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது.

இந்தியாவின் கடற்படை வல்லமை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு பொன்னான வரலாற்றைக் கொண்டுள்ளது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், தொழில்நுட்பமும் வளங்களும் குறைவாக இருந்தபோது, சிந்துதுர்க் போன்ற பல கோட்டைகளை இந்தியா எழுப்பியது. 11,000 கிலோமீட்டருக்கும் அதிகமான கடலோரப் பகுதியுடன், முக்கிய உலக வர்த்தகப் பாதைகளில் இந்தியாவின் உத்திசார்ந்த அமைவிடம், துறைமுக அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சிக்கு மகத்தான வாய்ப்புகளை வழங்குகிறது. இதனால்தான் புதிய இந்தியா, இப்போது அந்தப் பொன்னான வரலாற்றின் மறுமலர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதுகிறது. கடல்சார் ஆற்றல் மற்றும் வலிமையின் முக்கியத்துவம், இந்திய மத நூல்களிலும் நவீனப் படைப்புகளிலும் விவரிக்கப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, புதிய இந்தியா கடல்சார் உள்கட்டமைப்பில் புதிய மைல்கற்களை எட்டுகிறது. முழுமையான கடல்சார் உள்கட்டமைப்புச் சூழல் அமைப்பை வலுப்படுத்த தொடர்ச்சியான பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களின் திறன் இரட்டிப்பாகியுள்ளது. துறைமுக இணைப்பை வலுப்படுத்த ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிரதமர் நரேந்திர மோடியின் "வளர்ச்சிக்கான துறைமுகங்கள்" மற்றும் "முன்னேற்றத்திற்கான துறைமுகங்கள்" என்ற தொலைநோக்குப் பார்வை, "உற்பத்தித்திறனுக்கான துறைமுகங்கள்" என்ற மந்திரத்தை செயல்பாட்டில் முன்னெடுத்துச் செல்கிறது. இதன் மூலம் களத்தில் தொடர்ச்சியாக மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவும் தனது கடல்வழிக் கப்பல் போக்குவரத்தை நவீனமாக்கி வருகிறது. இந்தியாவில் உள்நாட்டு நீர்வழிப்பாதைகளின் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உள்ளாகி வருகிறது. இந்தியாவின் கடல்சார் திறன்கள் வலுவாக இருந்தபோதெல்லாம், நாடும் உலகமும் பெரிதும் பயனடைந்துள்ளன என்பதற்கு வரலாறு சாட்சியாக உள்ளது. இந்தத் தொலைநோக்குப் பார்வையுடன், இந்தத் துறையை வலுப்படுத்த கடந்த பத்தாண்டுகளாக முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### ஒரு வளமான வரலாறு புத்துயிர் பெற்று வருகிறது

இந்தியா ஒரு வளமான கடல்சார் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. பண்டைக் காலத்திலிருந்தே, இந்தியா கப்பல் கட்டுதல் மற்றும் கடல் வர்த்தகத்தில் பெயர் பெற்று விளங்கியது. இது சோழர்கள், மராத்தியர்கள் போன்ற சக்திவாய்ந்த வம்சங்களின் தாயகமாக இருந்தது. அவர்களின் வலுவான கடற்படை, விரிவான வர்த்தகம், உத்திசார்ந்த திறமை ஆகியவை நாட்டின் முன்னேற்றத்திலும், ஆற்றலிலும் முக்கியப் பங்காற்றின. பெருங்கடல்கள் எவ்வாறு வாய்ப்புகளின் பாலமாகச் செயல்பட முடியும் என்பதை அவர்களின் தொலைநோக்குப்

*மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் தொடரும் மோதலால் மாறிவரும் கடல்சார் சூழலைக் கருத்தில் கொண்டு, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப்பாதைகள் அமைச்சகம், கண்காணிப்பு மற்றும் தயார்நிலைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இந்தியக் கடற்பயணிகள் மற்றும் இந்தியக் கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும், தடையற்ற கடல் வர்த்தகத்தை உறுதி செய்வதும் இதன் முதன்மை நோக்கமாகும்.*



பார்வை வெளிப்படுத்தியது, ஆனால் நீண்ட காலமாக, இந்தியாவின் கடல்சார் துறை காலாவதியான சட்டங்கள், குறைந்த திறன் ஆகியவற்றால் தடுமாறியது. இந்த மோசமான நிலையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தொலைநோக்கு முயற்சி 2014-ல் தொடங்கப்பட்டது. மேலும் கடந்த 11 ஆண்டுகளில், இந்தத் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று, இந்தியாவின் கடல்சார் துறை நவீனமாகவும், உலகளாவிய நம்பிக்கை மற்றும் தேசியப் பெருமையின் சின்னமாகவும் மாறியுள்ளது. இந்தியக் கடற்கரைகளில் நாகரிகங்கள் செழித்தன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, இந்தியத் துறைமுகங்கள் முக்கிய வர்த்தக மையங்களாக இருந்து வருகின்றன. இந்தக் கடற்கரைகள் இந்தியாவை உலகத்துடன் இணைத்துள்ளன. இந்தியாவின் முன்னேற்றத்துக்கு ஒரு முக்கிய அடித்தளமாக அதன் கடல்சார் சக்தி இருந்தது. இந்த வலிமைக்கு ஓர் உதாரணம், கடல் வர்த்தகம் மற்றும் கடல்சார் வல்லமையை புதிய உச்சத்துக்கு உயர்த்திய சத்திரபதி சிவாஜி மகராஜ் ஆவார். அவர் புதிய கொள்கைகளை வகுத்து, நாட்டின் முன்னேற்றத்திற்காக முடிவெடுத்தார். ஒரு காலத்தில் இந்தியாவின் வலிமை மிகவும் மகத்தானதாக இருந்தது. அதனால் தார்யா சாரங் கன்னோஜி அங்கரே முழு கிழக்கிந்தியக் கம்பெனியையும் அடக்கி ஆண்டார். இருப்பினும், சுதந்திரத்திற்குப் பின், அந்தப் பாரம்பரியம் புறக்கணிக்கப்பட்டது. தொழில்துறை வளர்ச்சியில் இருந்து வர்த்தகம் வரை, இந்தியா பின்தங்கியது. ஒரு கடற்படை வல்லரசாக, ஒரு காலத்தில் உலகின் மிகப்பெரிய கப்பல் கட்டும் மையமாக இந்தியா இருந்தது. இந்தியாவின் கடலோர மாநிலங்களில் கட்டப்பட்ட கப்பல்கள் உள்நாட்டு மற்றும் உலகளாவிய வர்த்தகத்தை ஊக்குவித்தன. ஆறு தசாப்தங்களுக்கு முன்பு கூட, இந்தியாவில் கட்டப்பட்ட கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. அந்த நேரத்தில், இந்தியாவின் இறக்குமதி, ஏற்றுமதியிலும் 40 சதவீதத்திற்கும் அதிகமானவை உள்நாட்டில் கட்டப்பட்ட கப்பல்கள் மூலம் கையாளப்பட்டன. இருப்பினும், பின்னர், நாட்டின் கப்பல் போக்குவரத்துத் துறை புறக்கணிக்கப்பட்டது.

இந்தியாவில் கப்பல் கட்டுவதில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக, வெளிநாட்டுக் கப்பல்களை வாடகைக்கு எடுப்பது சிறந்ததாகக் கருதப்பட்டது. இது இந்தியாவில் கப்பல் கட்டுமானச் சூழலை முடக்கியது, மேலும் வெளிநாட்டுக் கப்பல்களின் மீதான சார்பு ஒரு தேவையாக மாறியது. இதன் விளைவாக, 5-6 தசாப்தங்களுக்கு முன் வர்த்தகத்தின் 40 சதவீதம் இந்தியக் கப்பல்களில் செய்யப்பட்டது, ஆனால் அந்தப் பங்கு வெறும் 5 சதவீதமாகக் குறைந்தது. அதாவது, நமது வர்த்தகத்தில் 95 சதவீதத்திற்கு நாம் வெளிநாட்டுக் கப்பல்களைச் சார்ந்திருந்தோம். எளிமையாகச் சொல்வதானால், இந்தத் துறையை மீட்டெடுக்க கடந்த தசாப்தத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு முன்பு, இந்தியா ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டுக்

*"கப்பல் போக்குவரத்து மேம்பாட்டிற்காக, 11 ஆண்டுகளுக்கு முன் நாம் நிர்ணயித்த இலக்குகளை அடைவதில் இந்தியா மகத்தான வெற்றியைப் பெற்று வருகிறது. பெரிய கப்பல்களுக்காக நாடு முழுவதும் பெரிய துறைமுகங்களை நாங்கள் உருவாக்கி வருகிறோம். மேலும் சாகர்மாலா போன்ற திட்டங்கள் மூலம் துறைமுக இணைப்பை மேம்படுத்தி வருகிறோம்.*

*நரேந்திர மோடி, பிரதமர்*

கப்பல் நிறுவனங்களுக்கு சரக்குக் கட்டணமாக சுமார் 75 பில்லியன் டாலர், அல்லது சுமார் ஆறு லட்சம் கோடி ரூபாயைச் செலுத்தி வந்தது. இதன் பொருள், இந்தியாவின் தற்போதைய பாதுகாப்பு பட்ஜெட் கப்பல் போக்குவரத்துக்காகச் செலவழிக்கப்பட்ட தொகைக்கு ஏறக்குறைய சமமாக இருந்தது. இந்தத் தொகை முன்கூட்டியே இந்தியாவின் கப்பல் போக்குவரத்துத் துறையில் முதலீடு செய்யப்பட்டிருந்தால், உலகம் இன்று இந்தியக் கப்பல்களைப் பயன்படுத்தியிருக்கும். நாடு மற்ற பொது நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய பணத்தைச் சேமித்திருக்கும். புதிய இந்தியா வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, தனது ஆற்றலையும் பெருமையையும் உணர்ந்துள்ளது. அதே நேரத்தில், நாடு கடல்சார் உள்கட்டமைப்பின் வளர்ச்சியில் தொடர்ந்து புதிய சாதனைகளைப் படைத்து வருகிறது. இன்று, கடல்சார் துறை இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறது. இது நாட்டின் வர்த்தகத்தில் சுமார் 95 சதவீதத்தை அளவின் அடிப்படையிலும், 70 சதவீதத்தை மதிப்பின் அடிப்படையிலும் கொண்டுள்ளது. இதன் மையத்தில் கப்பல் கட்டுதல் உள்ளது. இது பெரும்பாலும் "வலுவான பொறியியலின் தாய்" என்று அழைக்கப்படுகிறது. இது வேலைவாய்ப்பு மற்றும் முதலீட்டிற்குக் கணிசமாக பங்களிப்பது மட்டுமின்றி, தேசியப் பாதுகாப்பு, உத்திசார் சுதந்திரம், வர்த்தகம் மற்றும் எரிசக்தி விநியோகத் தொடர்களை மேம்படுத்துகிறது.

கப்பல் கட்டுமானம் இந்தியாவிலேயே நடைபெறுவதையும், அது இந்தியக் குடிமக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதையும் உறுதி செய்வதற்கு மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது. இந்த நோக்கில் பல லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

> *"கப்பல் போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள், இந்தியாவின் பத்தாண்டுகால சீர்திருத்தப் பயணத்தின் தொடர்ச்சியாகும். கடந்த பத்தாண்டுகள் அல்லது பதினோராண்டுகளை நாம் உற்றுநோக்கினால், இந்தியாவின் கடல்சார் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகத் திகழ்கிறது.*
>
> *– நரேந்திர மோடி, பிரதமர்*

இதன் விளைவாக, பெரும்பாலான துறைமுகங்களின் கொள்ளளவு இரட்டிப்பாகியுள்ளது, தனியார் முதலீடு அதிகரித்துள்ளது. மேலும், கப்பல்கள் வந்து செல்லும் நேரம் குறைந்துள்ளது. இது தொழில்துறைகளுக்கும் வர்த்தகர்களுக்கும் பயனளித்து, செலவுகளைக் குறைத்துள்ளது. குஜராத்தில் உள்ள லோத்தலில் கண்டுபிடிக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரிகத் துறைமுகம், இந்தியாவின் ஒரு குறிப்பிடத்தக்க பாரம்பரியச் சின்னமாகும். ஒரு காலத்தில், 80-க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் சூரத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தன. இந்த வலிமையைச் சார்ந்திருந்த சோழப் பேரரசு, தனது வர்த்தகத்தைத் தென்கிழக்கு ஆசியாவின் பல நாடுகளுக்கு விரிவுபடுத்தியது. எனவே, வெளிநாட்டு சக்திகள் இந்தியாவைத் தாக்கியபோது, இந்த சக்தியே முதல் இலக்காக இருந்தது. படகு மற்றும் கப்பல் கட்டுதலுக்குப் பெயர் பெற்ற இந்தியா, ஒரு குறிப்பிடத்தக்க சொத்தாக விளங்கியது. கலை, திறமை என அனைத்தும் முடங்கிப் போயின. இது கடல்கள் மீதான தனது கட்டுப்பாட்டையும், உத்திசார் பொருளாதார வலிமையையும் இந்தியா இழக்க வழிவகுத்தது. இந்தியா இன்று வளர்ச்சியைத் தொடரும்போது, இழந்த இந்தப் பெருமையை மீண்டும் பெறுவதில் விரைவான முன்னேற்றங்களை அடைந்துள்ளது. கடல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இந்தியா நீலப் பொருளாதாரத்திற்கு முன்னெப்போதும் இல்லாத உத்வேகத்தை அளித்து வருகிறது. சாகர்மாலா திட்டத்தின் கீழ் துறைமுகங்களை மையமாகக் கொண்ட மேம்பாட்டுப் பணிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளதுடன்,



# இந்தியக் கடல்சார் வல்லமை

**கடல்சார் துறை இந்தியாவின் வலிமை, நிலைத்தன்மை மற்றும் தொடர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. 11,098 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரை, 13 கடலோர மாநிலங்கள், ஏறத்தாழ 1,300 தீவுகள் மற்றும் 2.37 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட பிரத்யேகப் பொருளாதார மண்டலம் ஆகியவை இந்தியாவை இயல்பான கடல்சார் வல்லரசாகத் திகழச் செய்கின்றன.**

**11,098** கி.மீ– தூர கடற்கரை

**13** கடலோர மாநிலங்கள்

**1,300** தீவுகள்

**23.7** லட்சம் சதுர கிலோமீட்டர் பிரத்தியேக பொருளாதார மண்டலங்கள்



### கடல்சார் என்றால் என்ன?

'கடல்சார்' என்பது கடல்சார் தொழில்கள், கப்பல் போக்குவரத்து, வர்த்தகம், கப்பல் கட்டுமானம், கடல்சார் பாதுகாப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது; இவை அனைத்தும் நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாதவையாகும்.

## செழுமையான வரலாறு

இந்தியாவின் கடல்சார் வரலாறு, சிந்து சமவெளி நாகரிகத்தைச் சேர்ந்த (உலகின் மிகப் பழைய துறைமுகமான) 'லோத்தல்' உடன் பிணைந்துள்ளது; இந்த நாகரிகம் மெசபடோமியாவுடன் வர்த்தகம் மேற்கொண்டிருந்தது. லோத்தலில் கண்டறியப்பட்ட 'நிலப்பகுதி துறைமுகம்', கி.மு. 2400-ம் ஆண்டைச் சேர்ந்ததாகும். கப்பல்களை நிறுத்தி வைப்பதற்கும், அவற்றைச் சீரமைப்பதற்கும் அமைக்கப்பட்ட உலகின் முதல் வசதியாக இது கருதப்படுகிறது.





*"இந்தியாவின் வரலாறு என்பது நமது கடல்சார் வல்லமையின் வரலாறாகும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், இத்தகைய தொழில்நுட்பங்களும் வளங்களும் இல்லாதிருந்த காலகட்டத்திலேயே, நாம் கடலையே அரணாகக் கொண்டு 'சிந்துதுர்க்' போன்ற எண்ணற்ற கோட்டைகளைக் கட்டியெழுப்பினோம். இந்தியாவின் கடல்சார் வல்லமை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையானதாகும். குஜராத் மாநிலம் லோத்தலில் கண்டறியப்பட்டுள்ள சிந்து சமவெளி நாகரிகத்தின் துறைமுகம், இன்று நமக்கு ஒரு மிகச்சிறந்த வரலாற்றுப் பாரம்பரியமாகத் திகழ்கிறது."*

*– நரேந்திர மோடி, பிரதமர்*

கடல்சார் தொலைநோக்குப் பார்வையின் கீழ் தனது கடல்களின் முழு ஆற்றலையும் பயன்படுத்தும் திசையில் வேகமாக முன்னேறி வருகிறது. "இந்தியா ஒரு வளமான கடல்சார் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. நமது மீனவர்களும், நமது பழமையான துறைமுக நகரங்களும் இந்தப் பாரம்பரியத்தின் அடையாளமாகத் திகழ்கின்றன. சௌராஷ்டிராவில் உள்ள பவநகர் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்தப் பாரம்பரியத்தை வருங்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்கவும், நமது ஆற்றலை உலகிற்குக் காட்சிப்படுத்தவும், லோத்தலில் ஒரு பிரம்மாண்டமான கடல்சார் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. இது உலகின் மிகப்பெரிய கடல்சார் அருங்காட்சியகமாக இருக்கும். "ஒற்றுமைச் சிலையைப் போலவே, இதுவும் இந்தியாவின் புதிய அடையாளமாக மாறும்" என்று அண்மையில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

### கடல்சார் துறையில் உலகளாவிய தலைமைத்துவத்தை ஏற்றல்

புதிய இந்தியா தனது இலக்குகளைத் திட்டமிட்ட காலத்திற்கு முன்பே அடைந்து வருகிறது. துறைமுகங்களை மையமாகக் கொண்ட மேம்பாட்டிற்காக 11 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் இந்தியா



# கடல்சார் பொருளாதாரம்

## இந்தியாவின் பொருளாதார வல்லமை கடலின் வழியே பாய்கிறது.

இந்தியாவின் பொருளாதார வலிமை கடல்கள் வழியாகப் பாய்கிறது. இந்தியாவின் வர்த்தகத்தில் ஏறத்தாழ 95 சதவீதம் அளவின் அடிப்படையிலும், சுமார் 70 சதவீதம் மதிப்பின் அடிப்படையிலும் கடல் வழிகள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகிறது.

**60%** நாட்டின் ஜிடிபி-யில் கடலோர மாநிலங்களின் இருந்து வருகிறது

ஏறத்தாழ 80 மில்லியன் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காகக் கடலை நம்பியுள்ளனர்.

**10%** கடல்சார் வர்த்தகம் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**2047**-க்குள் மும்மடங்காக உயர்த்த இலக்கு

உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய மீன் உற்பத்தியாளராக இந்தியா திகழ்கிறது; உலகளாவிய உற்பத்தியில் இது 8 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

இந்தியாவின் மீன்வளத் துறை, ஏறத்தாழ 3 கோடி மக்களின் வாழ்வாதாரத்திற்குத் துணை நிற்பதோடு, நாட்டின் ஏற்றுமதிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்கிறது.



*செயல்திறனையும் இணைப்பு வசதிகளையும் மேம்படுத்த விரிவான பணிகள் நடைபெற்று வருகின்றன. கடலோரப் பொருளாதார மண்டலங்கள், துறைமுகங்களை மையமாகக் கொண்ட ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் தொழிற்பூங்காக்களுடன் நாம் நமது துறைமுகங்களை ஒருங்கிணைத்து வருகிறோம். இது தொழில்துறை முதலீடுகளைப் பெருக்குவதோடு, துறைமுகங்களுக்கு அருகிலேயே உலகளாவிய உற்பத்தி நடவடிக்கைகளையும் ஊக்குவிக்கும்.*

*நரேந்திர மோடி, பிரதமர்*

குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்று வருகிறது.
பெரிய கப்பல்களுக்கு இடமளிக்க நாடு முழுவதும் பெரிய துறைமுகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் சாகர்மாலா போன்ற திட்டங்கள் துறைமுக இணைப்பை மேம்படுத்துகின்றன. கடந்த 11 ஆண்டுகளில், இந்தியா தனது துறைமுகத் திறனை இரட்டிப்பாக்கியுள்ளது. 2014-க்கு முன், இந்தியாவில் கப்பல் பணி நடைமுறைகள் தொடங்கி நிறைவடைவதற்கான சராசரி நேரம் இரண்டு நாட்கள் ஆகும். இப்போது, நேரம் ஏறத்தாழ 60 சதவீதம் குறைந்து, ஒரு நாளுக்கும் குறைவாகவே உள்ளது. நாடு முழுவதும் புதிய மற்றும் பெரிய துறைமுகங்களும் கட்டப்பட்டு வருகின்றன.
அண்மையில், நாட்டின் முதலாவது ஆழ்கடல் சரக்குப் பெட்டகக் கப்பல் போக்குவரத்துத் துறைமுகம் கேரளத்தில் திறக்கப்பட்டது.
மஹாராஷ்டிராவில் வதாவன் துறைமுகம் 75,000 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இது உலகின் முதல் 10 துறைமுகங்களில் ஒன்றாக இருக்கும்.

இன்று, கடல்சார் வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 10 சதவீதம் மட்டுமே. 2047-க்குள் உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தில் தனது பங்கினை ஏறத்தாழ மூன்று மடங்காக உயர்த்த இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. 8 டிரில்லியன் ரூபாய் முதலீடு மற்றும் 2047-க்குள் 15 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், கடல்சார் துறையில் உலகளாவிய தலைவராக

# கடல்சார் தொலைநோக்கு

## இந்தியாவின் எதிர்காலக் கடல்சார் தொலைநோக்கு

உலகளாவிய கடல்சார் சக்தியாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் இந்தியா தொடர்ந்து துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தச் சூழலில், 2030-ம் ஆண்டுக்குள் கடல்சார் துறையில் இந்தியா எவ்வளவு வலுவாக நிற்கும் என்பதைத் தீர்மானிக்கும் தொலைநோக்குப் பார்வைக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், ஒரு தொலைநோக்குப் பார்வைக்கான செயல்திட்டமும் தயாரிக்கப்பட்டு, 2047-ம் ஆண்டுக்குள் ஒரு கடல்சார் சக்தியாக வளர்ச்சியடைந்த பாரதம் எவ்வளவு வலிமையானதாக இருக்கும் என்பதை வரையறுக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.




### இந்தியாவின் கடல்சார் தொலைநோக்கு (எம்ஐவி) 2030

கடல்சார் இந்தியா தொலைநோக்குத் திட்டம் 2030, இந்தியாவின் கடல்சார் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான விரிவான கட்டமைப்பை வழங்குகிறது. இதில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப்பாதைகள் அடங்கும். உலகளாவிய கடல்சார் தலைமையை நோக்கி இந்தியாவை முன்னெடுத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்ட 150 முன்முயற்சிகளை எம்ஐவி 2030 கோடிட்டுக் காட்டுகிறது

### கடல்சார் அமிர்த காலத் தொலைநோக்கு 2047

இந்தியா தனது வர்த்தகத் தேவைகளை பூர்த்தி செய்யத் தயாராக இருப்பது மட்டுமின்றி, கடல்சார் தலைவராக உருவெடுக்கவும் தயாராக உள்ளது. இதன் அடிப்படையில், இந்தியாவின் கடல்சார் மறுமலர்ச்சிக்கான நீண்டகாலச் செயல்திட்டமாக கடல்சார் அமிர்த காலத் தொலைநோக்கு 2047 வடிவமைக்கப்பட்டுள்ளது. துறைமுகங்கள், கடலோரக் கப்பல் போக்குவரத்து, உள்நாட்டு நீர்வழிப்பாதைகள், கப்பல் கட்டுதல் மற்றும் பசுமை கப்பல் போக்குவரத்து முயற்சிகளுக்கு சுமார் 80 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்ய இது திட்டமிட்டுள்ளது.



*இன்று, கடல்சார் வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 10% மட்டுமே. இதை நாம் மேலும் அதிகரிக்க வேண்டும். 2047-க்குள் உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தில் நமது பங்கினை ஏறத்தாழ மூன்று மடங்காக அதிகரிக்க விரும்புகிறோம். அதையும் நாங்கள் செய்வோம்.*

*நரேந்திர மோடி, பிரதமர்*

இந்தியா மாற உள்ளது. இந்தியாவின் கடல்சார் வர்த்தகம் வளரும்போது, மாலுமிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. இவர்கள் கப்பல்களை இயக்கும், என்ஜின்கள் மற்றும் எந்திரங்களைப் பராமரிக்கும், ஏற்றுதல் மற்றும் இறக்குதலை மேற்பார்வையிடும் கடின உழைப்பாற்றல் கொண்ட தொழில் வல்லுநர்கள் ஆவர்.
முன்பு, 1,25,000-க்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாலுமிகளே இருந்த நிலையில், தற்போது அவர்களின் எண்ணிக்கை 3,00,000-ஐக் கடந்துள்ளது. தற்போது, அதிக எண்ணிக்கையிலான மாலுமிகளை வழங்குவதிலும், இந்திய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், உலகின் முதல் மூன்று நாடுகளில், இந்தியாவும் ஒன்றாகத் திகழ்கிறது. ஒரு காலத்தில், புறக்கணிக்கப்பட்டு வந்த இத்துறை, தற்போது, ஒரு வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அடித்தளமாக உருவெடுத்து வருகிறது. தமிழ்நாடும், தென்னிந்தியாவும் இதன் மூலம் கிடைக்கும் பெரும் பலன்களை அறுவடை செய்கின்றன. தமிழ்நாட்டில் மூன்று பெரிய துறைமுகங்களும் பன்னிரண்டுக்கும் அதிகமான சிறிய

# கடல்சார் உள்கட்டமைப்பு

## இந்தியாவின் கடல்சார் வல்லமையை வலுப்படுத்துதல்

**இந்தியாவின் எதிர்காலம், கடல்களுடன் பிரிக்க முடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் நாட்டின் வளமான கடல்சார் பாரம்பரியம் மற்றும் திறன்களை வலுப்படுத்த இந்தத் துறையில் உள்கட்டமைப்பை வலுப்படுத்த பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்தியாவின் கடல்சார் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் கப்பல் கட்டுதல் மற்றும் பசுமைக் கப்பல் போக்குவரத்தில் திடமான முடிவுகளை அளிக்கின்றன.**


**ரூ. 69,725 கோடி** மதிப்பில் இந்தியாவின் கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார் சூழல் அமைப்பைப் புதுப்பிக்க விரிவான தொகுப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், கப்பல் கட்டுமான நிதி உதவித் திட்டம் (எஸ்பிஎஃப்ஏஎஸ்) 2035 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.


### கப்பல் போக்குவரத்து

இந்தியாவின் கப்பல் போக்குவரத்துத் திறன் ( மொத்த டன்னேஜ்) 35% அதிகரித்துள்ளது


(திறன் மில்லியன் ஜிடி (GT)–யில்)





**இந்தியக் கொடியுடனான கப்பல்கள்/கலங்கள்**




கப்பல்களில் பணிபுரியும் ஊழியர்களின் (மாலுமிகள்) எண்ணிக்கையில் 174% உயர்வு காணப்பட்டது




**கடர்சார் துறையில் பெண் மாலுமிகளின் எண்ணிக்கை**









துறைமுகங்களும் உள்ளன. தெற்கில் உள்ள ஏறக்குறைய அனைத்து மாநிலங்களும், கடற்கரையின் மகத்தான ஆற்றலுடன் இணைக்கப்பட்டுள்ளன. கடல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி, தமிழ்நாடு போன்ற மாநிலத்தின் வளர்ச்சிக்கு நேரடியாக வழி வகுக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளில், சரக்குப் போக்குவரத்துக்கான செயல்திறன் குறியீட்டில், இந்தியா பல இடங்கள் முன்னேறி, 38–வது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில், துறைமுக செயல்பாட்டுத் திறன் இரட்டிப்பாகியுள்ளது. தேசிய நீர்வழிப் பாதைகள், எட்டு மடங்கு விரிவடைந்துள்ளன. இந்தியாவில் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தும், நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. மேலும், மாலுமிகளின்




எண்ணிக்கையும் இரட்டிப்பாகியுள்ளது.

இது மட்டுமின்றி, 'மகாசாகர் கடல்சார் தொலைநோக்குப் பார்வை' திட்டத்தின் பணிகளும், அதிவிரைவான முன்னேற்றம் அடைந்து வருகிறது. இன்று, உலகின் எந்தவொரு இடத்திற்கும், இந்தியாவால், மனிதாபிமான உதவிகளை வழங்க முடிகிறது. ஆப்பிரிக்கா முதல் தென்கிழக்கு ஆசியா வரை, பேரிடர் பாதிப்பு காலங்களில், உலக நாடுகள் இந்தியாவை ஒரு நட்பு நாடாகக் கருதுகிறது. 2014–ல், அண்டை நாடான மாலத்தீவுகள், தண்ணீர் பற்றாக்குறை நெருக்கடியை எதிர்கொண்ட போது, இந்தியா 'ஆபரேஷன் நீர்' என்ற நடவடிக்கையைத் தொடங்கியது. மேலும், இந்தியக் கடற்படை, அங்கு தூய்மையான தண்ணீருடன் சென்றடைந்தது. 2017–ல், இலங்கையில், பேரழிவு விளைவிக்கக்கூடிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது, இந்தியா, முதலாவது நாடாக உதவிக்கரம் நீட்டியது. 2018–ல், இந்தோனேசியா, சுனாமியால் பேரழிவுக்குள்ளான போது, நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் இந்தியா அந்நாட்டு மக்களுடன் துணை நின்றது.

இதே போன்று, மியான்மரில், நில நடுக்கத்தால் ஏற்பட்ட பேரழிவாக இருந்தாலும், அல்லது 2019–ம் ஆண்டில் மொசாம்பிக் நாட்டிலும், 2020–ம் ஆண்டில் மடகாஸ்கர் நாட்டிலும் ஏற்பட்ட நெருக்கடிகளாக இருந்தாலும், இந்தியா சேவை



## சாகர்மாலா திட்டம்

சாகர்மாலா திட்டத்தின் கீழ், ஏறக்குறைய ரூ. 5.79 லட்சம் கோடி மதிப்பிலான 839 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில், பொதுத்துறை, தனியார்த் துறையுடன் இணைந்து, 119 திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**280** திட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

**ரூ.1.42** லட்சம் கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளன.

- ரூ. 1.62 லட்சம் கோடி மதிப்பிலான 209 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதே சமயம், ரூ. 2.75 லட்சம் கோடி மதிப்பிலான 353 திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.
- ரூ. 35,423 கோடி மதிப்பிலான 106 துறைமுக நவீனமயமாக்கல் திட்டங்கள் நிறைவடைந்துள்ள.
- ரூ. 58,628 கோடி மதிப்பிலான 96 துறைமுக இணைப்பு (சாலை மற்றும் ரயில்) திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- ரூ. 45,865 கோடி மதிப்பிலான 19 துறைமுகத் தொழில்மயமாக்கல் திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இதன் காரணமாக, 8,000 ஏக்கருக்கும் அதிகமான நிலம், தொழில்மயமாக்கப்பட்டுள்ளன.
- ரூ. 11,573 கோடி செலவில், 81 கடலோர சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில், ஏறக்குறைய ரூ. 2,000 கோடி மதிப்பிலான 23 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன.
- ரூ. 1,078 கோடி மதிப்பிலான 112 மீன்பிடித் துறைமுகத் திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம், 35,000-க்கும் அதிகமான மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

> *"கப்பல் போக்குவரத்துத் துறையில், மனிதவளத்தில், இந்தியா சிறந்து விளங்குகிறது. கடந்த பத்தாண்டுகளில், இந்திய மாலுமிகளின் எண்ணிக்கை 1.25 லட்சத்திலிருந்து 3 லட்சத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது. நீங்கள் உலகின் எந்தக் கடற்கரைக்குச் சென்றாலும், அங்குள்ள கப்பலில், சில இந்திய மாலுமிகளைக் காண முடியும். இன்று, மாலுமிகளின் எண்ணிக்கை அடிப்படையில், உலகின் முதல் மூன்று நாடுகளில் ஒன்றாக, இந்தியா உருவெடுத்துள்ளது."*
>
> *– நரேந்திர மோடி, பிரதமர்*

- ரூ. 640 கோடி மதிப்பிலான, நகர்ப்புற நீர்வழிப் போக்குவரத்து தொடர்பான 18 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இதனால், சாலை மற்றும் ரயில் போக்குவரதுக்களின் மீதான அழுத்தம் குறைந்துள்ளது.
- ரூ. 430 கோடி முதலீட்டில், ஆறு பிரத்யேக கடலோரத் துறைமுகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கேபெக்ஸ் (மூலதனச் செலவு) 228% அதிகரித்துள்ளது






## நாட்டின் முக்கியத் துறைமுகங்கள்




**12** முக்கியத் துறைமுகங்கள், அரசுக்குச் சொந்தமானவை.

**217** சிறிய மற்றும் நடுத்தரத் துறைமுகங்கள்

### கடற்படை பட்ஜெட்

கோடி ரூபாய்
2020-

கோடி ரூபாய்
2025-






## வளர்ந்து வரும் உத்திசார் முக்கியத்துவம்

### ஐஎன்எஸ் விக்ராந்த்

இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானம் தாங்கி கப்பல், செப்டம்பர் 2, 2022 அன்று, இந்திய கடற்படையுடன் இணைக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி, ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க்கப்பலில், 2025-ம் ஆண்டின் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடினார்.

- ரூ. 90,000 கோடி செலவில், 51 பெரிய கப்பல்கள், உள்நாட்டியிலேயே கட்டமைக்கப்பட்டு வருகின்றன.
- 100-வது மற்றும் 101-வது உள்நாட்டுப் போர்க்கப்பல்களான, ஐஎன்எஸ் உதயகிரி, ஐஎன்எஸ் ஹிம்கிரி ஆகியவை, கடற்படையுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- 2014 முதல், இந்தியக் கப்பல் கட்டும் தளங்கள், 40-க்கும் அதிகமான உள்நாட்டுப் போர்க்கப்பல்களையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும், இந்தியக் கடற்படைக்கு வழங்கியுள்ளன. கடந்த ஆண்டில், சராசரியாக, ஒவ்வொரு 40 நாட்களுக்கும், ஒரு புதிய கப்பல், கடற்படையுடன் இணைக்கப்பட்டது.



- பாதுகாப்புத் துறைக்கானச் செலவினங்களில், கடற்படையின் பங்களிப்பு 15%-என்பதிலிருந்து 21%-ஆக அதிகரித்துள்ளது.
- ஐ.என்.எஸ் அஞ்சதீப் கப்பலும், 2026 பிப்ரவரி 27 அன்று, கடற்படையில் இணைந்தது.
- அதிநவீன போர்க்கப்பல்களான உதயகிரி (எப்35) மற்றும் ஹிம்கிரி (எப்34) ஆகியவை, 2025-ல், கடற்படையில் இணைக்கப்பட்டன. இரண்டு பெரிய போர்க்கப்பல்கள், ஒரே சமயத்தில், கடற்படையுடன் இணைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

மனப்பான்மையுடன் அந்த நாடுகளுக்கு உறுதுணையாக இருந்தது. கோவிட் பெருந்தொற்று காலத்திலும் கூட, மக்களைக் கடல் வழியாக மீட்டு வர, "சமுத்திர சேது" நடவடிக்கை தொடங்கப்பட்டது. இதன் பொருள், கடல்சார் வலிமை என்பது உத்திசார்ந்த, கடற்படையின் வியூகமாக மட்டுமின்றி, அது மனிதகுல நலன்களின் இன்றியமையாத பாதுகாவலராகவும் இருப்பதாகும்.


### கொள்கை மாற்றங்கள்... கடற்கரைகள், வளத்திற்கான நுழைவாயில்களாக உருவெடுக்க வேண்டும் என்பதற்காக,

நாட்டின் கடல்சார் துறையை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக, மத்திய அரசின் கொள்கைகளில் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசு தற்போது, பெரிய கப்பல்களை

## சக்திவாய்ந்த முன்முயற்சி

# கடல்சார் சக்தியை வலுப்படுத்தும் முன்முயற்சிகள்

**லோத்தல் அருங்காட்சியகம்**



### கடல்சார் பாரம்பரியம் குறித்த ஒரு கண்ணோட்டம்

குஜராத் மாநிலம் லோத்தலில், கடல்சார் பாரம்பரியத்தை வலுப்படுத்தும் வகையில், இந்தியா – நெதர்லாந்து நாடுகள் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம், இந்தியாவின் 4,500 ஆண்டுகள் பழமையான, வளமான கடல்சார் பாரம்பரியத்தை உலக அளவில் தரம் உயர்த்துவதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையாகும். இது கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும், உலகின் மிகப்பெரிய கடல்சார் அருங்காட்சியகமாக திகழும் என்று பிரதமர் மோடி கூறினார். இது இந்தியாவின் பண்டைய கடல்சார் மரபுகளைக் காட்சிப்படுத்துவதுடன், சுற்றுலா, ஆராய்ச்சி, கல்வி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான மையமாகவும் உருவெடுக்கும்.

### கடல்சார் பல்கலைக்கழகம்

இந்தியக் கடல்சார் பல்கலைக்கழகம் (ஐஎம்யு), சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு மத்திய பல்கலைக்கழகம் ஆகும். சென்னை, கொல்கத்தா, விசாகப்பட்டினம், கொச்சி, மும்பை துறைமுகம், நவி மும்பை ஆகிய இடங்களில், இந்தப் பல்கலைக்கழகத்திற்கு, ஆறு நிறுவனங்களும், இதனுடன் 17 இணைப்பு நிறுவனங்களும் உள்ளன. 2025 ஏப்ரல் 8 அன்று, மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனாவால், நாடு முழுவதும் உள்ள ஆறு இந்திய கடல்சார் பல்கலைக்கழக (ஐஎம்யு) வளாகங்களில், ரூ. 67.77 கோடி மதிப்பிலான 26 திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

### கடல்சார் கௌரவ (சாகர் சம்மான்) விருது

கடல்சார் துறைக்கு ஆற்றிய சிறந்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில், கடல்சார் கௌரவ (சாகர் சம்மான்) விருது வழங்கப்படுகிறது. இது வழக்கமாக ஆண்டுதோறும் ஏப்ரல் 5 அன்று, தேசிய கடல்சார் தினத்தன்று வழங்கப்படுகிறது. இந்த விருது, குறிப்பாக, அண்மை ஆண்டுகளில், முக்கியத்துவம் பெற்றுள்ளது. மத்திய அரசின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு "கடல்சார் துறைக்கு கௌரவம்" அளிக்கும் திட்டத்தைத் தொடங்கியது. எதிர்காலத்தில், பாலினச் சமத்துவமுள்ள கடல்சார் பணியாளர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

*இந்தியாவில் வடிவமைக்கப்பட்ட கப்பல்கள், ஒரு காலத்தில், உலக வர்த்தகத்தின் இன்றியமையாத அங்கமாக இருந்தன. பின்னர், நாம் கப்பல் உடைக்கும் துறையில் கவனம் செலுத்தினோம். தற்போது, இந்தியாவில் மீண்டும் கப்பல் கட்டுமானத் துறையில், புதிய உச்சங்களை எட்டுவதற்கான முயற்சிகள் முடுக்கிவிட்டுள்ளன. நாம் தற்போது, உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம், பெரிய கப்பல்களுக்கான சொத்துக்கள் என்ற நிலையை உருவாக்கியுள்ளோம்.*

*– நரேந்திர மோடி, பிரதமர்*



உள்கட்டமைப்பு வசதிகளின் ஓர் அங்கமாக அங்கீகரித்துள்ளது.


உள்கட்டமைப்பிற்கான சொத்தாக ஒரு துறை அங்கீகரிக்கப்படும் போது, அதன் நன்மைகள் இயல்பாகவே வலுவடைகின்றன. தற்போது, பெரிய அளவிலான கப்பல் கட்டுமான நிறுவனங்கள், வங்கிகளிடமிருந்து கடனுதவிகள் பெறும் நடைமுறைகள் எளிதாக்கபட்டுள்ளன. மேலும், அதற்கான வட்டி விகிதங்களில், சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கப்பல் கட்டுமான நிறுவனங்கள், உள்கட்டமைப்பு நிதியுதவியின் அனைத்துப் பலன்களையும் பெற்று வருகின்றன. மத்திய அரசின் இந்த முடிவு, இந்தியக் கப்பல் கட்டுமான நிறுவனங்களின் சுமையைக் குறைத்து, அவை உலக அளவில் போட்டியிட உதவுகிறது. இந்தியாவை உலகின் ஒரு முக்கியக் கடல்சார் சக்தியாக உருவெடுக்கச் செய்யும் வகையில், மத்திய அரசு, மேலும் மூன்று முக்கியத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான






## பசுமைத் துறைமுக வழிகாட்டுதல்களின் முக்கிய அம்சங்கள்

ஒரு டன் சரக்கு கையாளுதல் நடவடிக்கையின் போது, ஏற்படும் கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்களிப்பை, 100%–வீதத்திற்கும் கூடுதலாக அதிகரிப்பதை, நோக்கமாகக் கொண்டுள்ளது.








- 2025–க்குள், புதிய மங்களூர் துறைமுகம், 100% சூரிய மின் சக்தியின் ஒருங்கிணைப்பை அடைந்து சாதனை படைத்துள்ளது. இது புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பயன்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கான அளவுகோலாகும்.
- சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்துவதற்காக, பசுமைப் பரப்பளவை, 2030–க்குள், 20%–வீதத்திற்கும் அதிகமாகவும், 2047–க்குள் 33%–வீதத்திற்கும் அதிகமாகவும் உயர்த்துவதை இந்தத் துறைமுகம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- துறைமுகங்களில், மேம்படுத்தப்பட்ட வள மேலாண்மை மற்றும் 100%–வீதக் கழிவுநீர் மறுபயன்பாடு மூலம், 2030–க்குள் சுத்திகரிக்கப்பட்ட நீரின் பயன்பாட்டை 20%–வீதத்திற்கும் அதிக அளவில் குறைப்பதற்கான நடவடிக்கைகள் அவசியமாகிறது.

### சுற்றுலா

கடல்சார் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் எண்ணிக்கை, 480% அதிகரித்துள்ளது





நதிகளில், சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேசிய நீர்வழிப் போக்குவரத்துகள்




கலங்கரை விளக்கங்களைப் பார்வையிடும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை

*330%–வீதம் அதிகரிப்பு*




**உலகின் மிக நீளமான நீர்வழிப் போக்குவரத்துக் கப்பலான 'கங்கா விலாஸ்', இந்தியா–பங்களாதேஷ் இடையேயான வழித்தடத்தின் மூலம், வாரணாசியிலிருந்து, திப்ருகர் வரை 3,200 கி.மீ. தூரத்தைக் கடந்தது. இந்த உல்லாசக் கப்பல், 2023–ம் ஆண்டில், தனது முதல் பயணத்தை நிறைவு செய்தது.**

பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த மூன்று திட்டங்களும், கப்பல் கட்டுமானத் துறைக்கு நிதியுதவி அளிப்பதுடன், கப்பல் கட்டும் தளங்களில், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதாகவும், வடிவமைப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கும், பெரிதும் உதவிகரமாக அமையும். வரும் ஆண்டுகளில், இந்தத் திட்டங்களுக்காக ரூ. 70,000 கோடிக்கும் கூடுதலான தொகை செலவிடப்படும். கப்பல் கட்டுமானம் என்பது ஒரு சாதாரணத் தொழில் அல்ல.

இது உலகெங்கிலும் 'அனைத்துத் தொழில்களின் தாய்' என்று அறியப்படுகிறது. இது ஒரு கப்பலைக் கட்டுமானம் செய்வது மட்டுமின்றி, அதனுடன் தொடர்புடைய தொழில்களையும் விரிவுபடுத்துகிறது. எஃகு, எந்திரங்கள், மின்னணுவியல், ஜவுளி, வண்ணப்பூச்சுகள் தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் உள்ளிட்ட எண்ணற்ற தொழில்கள், கப்பல் போக்குவரத்துத் துறையால் பயனடைகின்றன. சிறு, குறு அளவிலான தொழில்களுக்கும் இது பயனளிக்கிறது. கப்பல் கட்டுமானத் தொழிலில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ரூபாயும், பொருளாதாரத்தில் செய்யப்படும் முதலீட்டை ஏறக்குறைய இரட்டிப்பாக்குகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒரு கப்பல் கட்டுமானத் தளத்தில் உருவாக்கப்படும் ஒவ்வொரு



## சட்ட சீர்திருத்தங்கள்

### கடல்சார் துறையில், வளர்ச்சியை விரைவுபடுத்துதல்

இந்தியாவின் கடல் மற்றும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் துறையை நவீனமாக்கவும், போட்டித்தன்மை வாய்ந்ததாக மாற்றவும் மத்திய அரசு விரிவான சட்ட சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல்வேறு சட்டங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய மசோதாக்கள் மூலம், இத்துறை வலுவான இடத்தைப் பிடித்துள்ளது...

#### சட்டங்கள்

- தேசிய நீர்வழிப் போக்குவரத்துச் சட்டம், 2016
- கடற்படை (அதிகார வரம்பு மற்றும் கடல்சார் உரிமை கோரல்களுக்குத் தீர்வு காணும்) சட்டம், 2017
- கப்பல் மறுசுழற்சி சட்டம், 2019
- முக்கியத் துறைமுக ஆணையங்கள் சட்டம், 2021
- உள்நாட்டுக் கப்பல்கள் சட்டம், 2021
- கடல்வழிப் பயணத்திற்கான உதவிகள் சட்டம், 2021

#### 2025-ல், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 5 புதிய மசோதாக்கள்...

- கடலோரக் கப்பல் போக்குவரத்து மசோதா, 2025
- கடல் வழியாக, சரக்குகள் கொண்டு செல்லுதல் மசோதா, 2025
- சரக்கு பட்டியல் மசோதா, 2025
- வணிகக் கப்பல் போக்குவரத்து மசோதா, 2025
- இந்தியத் துறைமுகங்கள் மசோதா, 2025

இந்தத் துறையில், வர்த்தகம் செய்வதை எளிதாக்கும் வகையில், ஏறக்குறைய 50 விதிகள், ஒழுங்குமுறைகள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அமலாக்கப்பட்டுள்ளன.

> *இந்த பூமி சத்ரபதி சிவாஜி மகராஜின் பூமி. சத்ரபதி சிவாஜி மகராஜ், கடல்சார் பாதுகாப்பிற்கு அடித்தளம் அமைத்தது மட்டுமின்றி, அரபிக்கடலின் வணிகப் பாதைகள் முழுவதும், இந்தியாவின் வலிமையை நிலைநாட்டினார். கடல் பகுதிகள் வெறும் எல்லைகளாக இருப்பது மட்டுமின்றி, அவை வாய்ப்புகளின் நுழைவாயில்களாகவும் உள்ளன என்பதையும் அவரது தொலைநோக்குப் பார்வை நமக்கு எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இன்று, இந்தியா அதே தொலைநோக்குப் பார்வையுடன் முன்னேறி வருகிறது.*
>
> – நரேந்திர மோடி, பிரதமர்

வேலைவாய்ப்பும், விநியோகத் தொடர்பு அமைப்புடன், ஆறு முதல் ஏழு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. இதன் பொருள், கப்பல் கட்டுமானத் தொழிலில், 100 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டால், அது சார்ந்த பிற துறைகளில் 600-க்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இத்துறை, ஒரு குறிப்பிடத்தக்க அளவில், விரிவாக்க நடவடிக்கைகளை பலமடங்கு அதிகரிக்க உதவுகிறது.

2047-ல், நாடு தனது 100-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வேளையில், இந்தியா ஒரு வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்க வேண்டுமானால், அது தற்சார்பு அடைய வேண்டும். இந்தியா தற்சார்பு அடைவதைத் தவிர வேறு வழியில்லை. அது சிப்-களாக இருந்தாலும், கப்பல்களாக இருந்தாலும், அவற்றை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஓர் உறுதியான தீர்மானத்தை 140 கோடி மக்களும் கொண்டுள்ளனர்.

இந்தத் தொலைநோக்குப் பார்வையுடன், இந்தியாவின் கடல்சார் துறையும் அடுத்த தலைமுறைக்கான சீர்திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறது. இன்று முதல் நாட்டின் ஒவ்வொரு முக்கிய துறைமுகமும், பல்வேறு ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளிலிருந்து விடுவிக்கப்படுகிறது. 'ஒரே நாடு, ஒரே ஆவணம்' மற்றும் 'ஒரே நாடு, ஒரே துறைமுகம்' ஆகிய செயல்முறைகள், வர்த்தக நடைமுறைகளை மேலும் எளிதாக்குகின்றன. இதற்காக, ஆங்கிலேயர் காலத்துச் சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு, கடல்சார்

# இந்தியாவின் தரவரிசை

## துறைமுகங்கள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கான தரவரிசையில் இந்தியா முன்னேற்றம் அடைந்துள்ளது

**கடந்த சில ஆண்டுகளில் துறைமுக உள்கட்டமைப்பு வசதிகள், சரக்குப் போக்குவரத்துக்கான டிஜிட்டல் நடைமுறைகள், செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகளால், உலக அரங்கில், இந்தியாவின் நிலை வலுவடைந்துள்ளது. உலக வங்கியின் சரக்குப் பெட்டகத் துறைமுக செயல்திறன் குறியீடு, சரக்குப் போக்குவரத்துக்கான செயல்திறன் குறியீடு ஆகியவற்றில், இந்தியத் துறைமுகங்கள் தரவரிசையில் அடைந்துள்ள முன்னேற்றம் இந்த மாற்றத்தை உறுதி செய்துள்ளது.**



### துறைமுகங்கள்

- உலக வங்கியின் சரக்குப் பெட்டகத் துறைமுக செயல்திறன் குறியீட்டின் (சிபிபிஐ) படி, 2023–24–ல், முதன்முறையாக, உலகின் முதல் 30 துறைமுகங்களில், இரண்டு இந்தியத் துறைமுகங்கள் இடம் பெற்றுள்ளன.
- உலக வங்கியின், சரக்குப் போக்குவரத்துக்கான செயல்திறன் குறியீட்டில் (எல்பிஐ), சர்வதேச சரக்கு அனுப்புதல் பிரிவிற்கான தரவரிசையில், கடந்த 2013–14–ல், 44–வது இடத்திலிருந்த இந்தியா, 2024–25–ல், 22–வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

*நாட்டின் கடல்சார் துறை, புதிய உச்சங்களை எட்டுவதற்கு, தனியார் துறையும் முக்கியப் பங்கு வகித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், பொதுத் துறை–தனியார் துறை ஒன்றிணைந்து, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம், நாட்டில் உள்ள துறைமுகங்கள், உலகத்தரத்திற்கு மேம்படுத்தப்பட்டதுடன் மட்டுமின்றி, எதிர்காலத்திற்கு ஏற்பத் தயார் நிலையில் உள்ளன."*

*– நரேந்திர மோடி, பிரதமர்*



துறையைச் சீர்திருத்தி, புதிதாக ஐந்து கடல்சார் சட்டங்களை இயற்றியுள்ளது. இந்தச் சட்டங்கள், கப்பல் போக்குவரத்துத் துறை மற்றும் துறைமுக நிர்வாகத்தில். ஒரு பெரிய மாற்றத்தை கொண்டுவரும். சந்தேகத்திற்கு இடமின்றி, இந்தியா பல நூற்றாண்டுகளாகப் பெரிய கப்பல்களைக் கட்டுமானம் செய்வதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. அடுத்த தலைமுறைக்கான சீர்திருத்த நடவடிக்கைகள், நாட்டின் மறக்கப்பட்ட இத்தகைய பெருமையை மீட்டெடுக்க உதவும். கடந்த பத்தாண்டுகளில், 40–க்கும் அதிகமான கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும், கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைத் தவிர, இவை அனைத்தும் இந்தியாவில் கட்டுமானம் செய்யப்பட்டவையாகும். பிரம்மாண்டமான ஐ.என். எஸ் விக்ராந்த் விமானம் தாங்கிப் போர்க் கப்பல், இந்தியாவில் உருவாக்கப்பட்டதாகும். இந்தக் கப்பலின் கட்டுமானத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட உயர்தர எஃகும், இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகும். அதாவது, அரசின் கொள்கைகளில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் மூலம், இன்று, இந்தியாவின் வலிமை மற்றும் திறன்களுக்கு, அரசியல் ரீதியிலான உறுதிப்பாட்டையும், வலுவான நம்பிக்கையையும் அளிக்கிறது, இதன் மூலம், இந்தியாவின் கடற்கரை, நாட்டின் வளத்திற்கான நுழைவாயிலாக உருவெடுத்து வருகிறது.

புதிய முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம், இந்தியா ஒரு முக்கிய கடல்சார் வலிமை கொண்ட நாடாக உருவெடுத்து வருகிறது. 21–ம் நூற்றாண்டில், இந்திய ராணுவத்தின் செயல்திறனை மேம்படுத்துவது, நாட்டின் முன்னுரிமைகளில் ஒன்றாக உள்ளது. இந்தியா அனைத்துத் துறைகளிலும் தனது நலன்களைப் பாதுகாத்து வருகிறது.

இந்தியா, நிலத்திலோ, வானிலோ, ஆழ்கடலிலோ அல்லது பரந்த விண்வெளியிலோ எங்கும் தனது நலன்களைப் பாதுகாத்து வருகிறது. இதை அடைவதற்குத் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீண்ட காலமாக, எல்லைப் பகுதிகளிலும் கடற்கரையோரப் பகுதிகளிலும் போக்குவரத்து இணைப்புகள் தொடர்பான உள்கட்டமைப்புகள் புறக்கணிக்கப்பட்டு வந்தன. கடந்த



"திட்டமிடப்பட்ட எட்டு டிரில்லியன் ரூபாய் முதலீடு, 2047–க்குள் 15 மில்லியன் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை உருவாக்குவதன் மூலம், கடல்சார் துறையில் உலகின் முன்னணி நாடாக உருவெடுக்கும் பாதையில் இந்தியா செல்கிறது. நமது கடல்சார் அமிர்த காலத் தொலைநோக்குப் பார்வை என்பது வளம், நிலைத்தன்மை, நமது கடல்சார் பாரம்பரியத்தின் மீதான பெருமிதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இது பிரதமர் நரேந்திர மோடியின் '2047–ல் வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப முழுமையாக அமைந்துள்ளது."

***–சர்பானந்த சோனாவால்,***
மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, நீர்வழிகள் துறை அமைச்சர்



பத்து ஆண்டுகளில் இதில் முன்னெப்போதும் இல்லாத முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில், இந்தியா தனது தொலைதூரத் தீவுகளிலும்கூட அதிக கவனம் செலுத்தியுள்ளது. மக்கள் வசிக்காத அந்தத் தீவுகள்கூட தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இந்தத் தீவுகளுக்குப் புதிய அடையாளங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றுக்குப் புதிய பெயர்களும் சூட்டப்படுகின்றன. இந்தியப் பெருங்கடலில் கடலுக்கு அடியில் உள்ள மலைகளுக்கும் பெயரிடப்பட்டு வருகிறது. 2024–ல், இந்தியாவின் முன்முயற்சியால், ஒரு சர்வதேச அமைப்பு இத்தகைய ஐந்து இடங்களுக்குப் பெயரிட்டுள்ளது. இந்தியப் பெருங்கடலில், அசோகர் கடல் மலை, ஹர்ஷவர்தன் கடல் மலை, ராஜராஜ சோழன் கடல் மலை, கல்பதரு முகடு, சந்திரகுப்தர் முகடு என ஐந்து இடங்களுக்குப் பெயரிடப்பட்டிருப்பது இந்தியாவின் பெருமையை மேலும் கூட்டுகிறது.

நாட்டின் கடல்சார் துறையை புதிய உயரங்களுக்கு எடுத்துச் செல்வதில் தனியார் துறையும் முக்கியப் பங்காற்றுகிறது. கடந்த 10 முதல் 11 ஆண்டுகளில் அரசு தனியார் கூட்டு ஒத்துழைப்புகளின் கீழ் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டு ஒத்துழைப்பு, துறைமுகங்களை உலகத் தரத்திற்கு உயர்த்தி இருப்பது மட்டுமின்றி, அவற்றை எதிர்காலத்திற்கு ஏற்ப தயார் நிலையில் வைத்துள்ளது. தனியார் துறையின் பங்களிப்பு, புத்தாக்கத்தையும், திறனையும் வளர்த்துள்ளது. நிச்சயமாக, இந்தியா நீண்ட கடற்கரையையும், உத்திசார் உலகளாவிய வர்த்தக வழித்தடங்களையும், உலகத்தரம் வாய்ந்த துறைமுகங்களையும், நீலப் பொருளாதாரத்திற்கான பரந்த, லட்சியமிக்க தொலைநோக்குப்பார்வையையும்கொண்டுள்ளது. இப்போது இந்தியா, உள்கட்டமைப்பு, புத்தாக்கம், தெளிவான தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்தத் துறை புதிய சூழலில் இருந்து புதிய உத்வேகத்தைப் பெற்று வருகிறது. இந்தியாவின் புத்துணர்ச்சி பெற்ற கடல்சார் வளர்ச்சிப் பயணத்தில் உலகமும் பங்கேற்று வருகிறது.







# ஜல் ஜீவன் இயக்கம் 2.0

## மூன்று முக்கியப் போக்குவரத்து இணைப்புத் திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது

**பொது நலனுக்கான மத்திய அரசின் அர்ப்பணிப்பின் விளைவாக, மத்திய அமைச்சரவை ஜல் ஜீவன் இயக்கம் (ஜேஜேஎம்) 2.0–க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த முடிவு, கிராமப்புறக் குடும்பங்களுக்குக் குழாய்கள் மூலம் தூய குடிநீர் கிடைப்பதை உறுதி செய்வது மட்டுமின்றி, நீர் மேலாண்மையையும் மேம்படுத்தும். மேற்கு வங்கம் – ஜார்க்கண்ட் பல்நோக்கு ரயில் வழித்தட திட்டம், ஜேவார் – தில்லி தேசிய தலைநகர் பிராந்திய பசுமை வழித்தட திட்டம், 4–வழி உஜ்ஜைனி – தில்லி – மும்பை விரைவுச்சாலை ஆகிய மூன்று முக்கிய போக்குவரத்து இணைப்புத் திட்டங்கள் உட்பட, மேலும் பல முக்கிய முன்மொழிவுகளுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டங்கள் இப்பகுதிகளில் வேலைவாய்ப்பு, சுற்றுலா, தொழில்துறை ஆகியவற்றை மேம்படுத்தும்...**

**முடிவு:** ஜல் ஜீவன் இயக்கத்தை (ஜேஜேஎம்) 2028–ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து, இது ஜேஜேஎம் 2.0 என மறுசீரமைக்கப்படும்.

**தாக்கம்:** 2019–20–ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 2.08 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, கூடுதல் பங்காக 3.59 லட்சம் கோடி ரூபாயை ஒதுக்கி, அதாவது 1.51 லட்சம் கோடி ரூபாய் கூடுதலாக மத்திய அரசின் உதவியுடன், மொத்த நிதி ஒதுக்கீட்டை 8.69 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தத் திட்டம், உள்கட்டமைப்பில் மட்டும் கவனம் செலுத்தாமல், மக்களுக்குத் தூய்மையான குடிநீர் வழங்குவதிலும் கவனம் செலுத்தும் வகையில் மறுசீரமைக்கப்படும். இது, கிராமப்புறங்களில் நிலையான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக, குடிநீர் மேலாண்மையையும், நிறுவன வழிமுறைகளையும் வலுப்படுத்தும்.
- நாடு முழுவதும் குடிநீர் விநியோக அமைப்பை, நீர் ஆதாரம் முதல் குழாய் வரை டிஜிட்டல் முறையில் வரைபடமாக்குவதற்காக, 'சுஜலம் பாரத்' என்று அழைக்கப்படும் ஒரு சீரான தேசிய டிஜிட்டல் கட்டமைப்பு செயல்படுத்தப்படும்.
- ஜேஜேஎம் 2.0 திட்டத்தின் கீழ், 2028 டிசம்பருக்குள் நாடு முழுவதும் உள்ள 19.36 கோடி கிராமப்புற வீடுகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் இணைப்புகளை வழங்குவதே இதன் இலக்காகும்.

**முடிவு:** மத்தியப் பிரதேசத்தில் உள்ள தில்லி – மும்பை விரைவுச்சாலையின் (தேசிய நெடுஞ்சாலை – 752 டி) பத்னாவர் – பெட்லாவட் – தாண்ட்லா – திமர்வானி பகுதியை 3,839.42 கோடி ரூபாய் செலவில் அரசு – தனியார் கூட்டு ஒத்துழைப்பு மாதிரியில், ஆண்டுத் தவணை முறையில் 4 வழிச்சாலையாக மாற்றும் பணிகளின் கட்டுமானத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**தாக்கம்:** ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த வழித்தடம் தில்லி – மும்பை விரைவுச்சாலையில் உள்ள திமர்வானி சந்திப்புடன் உஜ்ஜைனியை இணைக்கிறது. முன்மொழியப்பட்ட இந்த நான்கு வழிச்சாலைத் திட்டத்தின் முதன்மை நோக்கம் பயணத் திறனை மேம்படுத்துவதாகும். மேலும் இது பயண நேரத்தை சுமார் ஒரு மணி நேரம் வரை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்மொழியப்பட்டுள்ள இந்தத் திட்டம் அதிவேக போக்குவரத்து இணைப்பை வழங்கும். இத்திட்டம் மேம்பட்ட பாதுகாப்புக்காகவும் தடையற்ற போக்குவரத்துக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது போக்குவரத்து நெரிசலையும் செயல்பாட்டுச் செலவுகளையும் குறைக்கும். இத்திட்டம் அப்பகுதியின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தி, மத்தியப் பிரதேசத்தில் உள்ள தார், ஜபுவா பகுதிகளின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை மேலும் விரைவுபடுத்தும்.

**முடிவு:** ஜேவார் சர்வதேச விமான நிலையத்திற்குப் புதிய சாலை அமைப்பதற்கான திருத்தப்பட்ட திட்ட வரைவு அங்கீகரிக்கப்பட்டது.

**தாக்கம்:** உத்தரப் பிரதேசம், ஹரியானா ஆகிய மாநிலங்களில், தில்லி – மும்பை விரைவுச்சாலையின் தில்லி – ஃபரிதாபாத் – பல்லப்கர் – சோனா புறவழிச்சாலையிலிருந்து ஜேவார் சர்வதேச விமான நிலையம் வரை ஒரு புதிய சாலையை அரசு – தனியார் கூட்டு ஒத்துழைப்பில், ஆண்டுத் தவணை முறையில் அமைப்பதற்காக, 3,630.77 கோடி ரூபாய் மதிப்பிலான திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த 31.42 கிலோமீட்டர் நீளமுள்ள வழித்தடம் நேரடியான, அதிவேகப் போக்குவரத்து இணைப்பை, தெற்கு தில்லி, ஃபரிதாபாத், குருகிராம் ஆகிய இடங்களில் இருந்து ஜேவார் சர்வதேச விமான நிலையத்திற்கு வழங்கும். தேசிய தலைநகர் பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சியையும் செயல்பாட்டுத் திறனையும் இது மேம்படுத்தும். இந்த வழித்தடம் கிழக்குப் புறவழிச்சாலை, யமுனை விரைவுச்சாலை, பிரத்யேக சரக்கு வழித்தடம் ஆகியவற்றை இணைக்கும். இந்த வழித்தடம் உள்கட்டமைப்பு மேம்பாடு, நகர்ப்புற உள்கட்டமைப்பில் நல்ல மாற்றம், பிராந்திய இணைப்பு, தேசிய செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றுக்கு ஒரு முக்கிய கருவியாக அமையும்.



அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

**முடிவு:** மேற்கு வங்கம், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களின் ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய இரண்டு பல்முனை வழித்தடத் திட்டங்களுக்கு ஒப்புதல்.

**தாக்கம்:** இந்தத் திட்டங்களின் மொத்தச் செலவு 4,474 கோடி ரூபாய் ஆகும். இவை 2030–31-க்குள் முடிக்கப்படும். இந்தத் திட்டங்களில் சைந்தியா – பாகூர் நான்காவது வழித்தடம், சந்திரகாசி – கரக்பூர் நான்காவது வழித்தடம் ஆகியவை அடங்கும். இது இந்திய ரயில்வேயின் தற்போதைய கட்டமைப்புடன் சுமார் 192 கிலோமீட்டரை அதிகரிக்கும். மேம்படுத்தப்பட்ட ரயில் பாதைத் திறன் ரயில் போக்குவரத்தைக் கணிசமாக மேம்படுத்தி, இந்திய ரயில்வேயின் செயல்பாட்டுத் திறனையும், சேவையின் நம்பகத்தன்மையையும் அதிகரிக்கும். இந்தப் பல்நோக்கு வழித்தடத் திட்டம், செயல்பாடுகளைச் சிறப்பாக்கவும் நெரிசலைக் குறைக்கவும் உதவும்.

**முடிவு:** தமிழ்நாட்டில் உள்ள மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரம் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**தாக்கம்:** மதுரை விமான நிலையத்திற்கு சர்வதேச விமான நிலைய அந்தஸ்து வழங்குவது, பிராந்திய இணைப்பை மேம்படுத்தி, வர்த்தகத்தை ஊக்குவித்து, அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும். நகரின் வரலாற்று முக்கியத்துவத்திற்கு ஏற்ப இந்த விமான நிலையம், சர்வதேசப் பயணிகளையும் வணிகத்தையும் கையாளும் திறனைக் கொண்டுள்ளது.

**முடிவு:** இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளிடமிருந்து வரும் முதலீடுகளுக்கான வழிகாட்டுதல்களை மாற்றி அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**தாக்கம்:** செய்திக் குறிப்பு 3-ன் (PRESS NOTE 3) கீழ் ஒப்புதல் தேவைப்படும் முக்கியத் துறைகளில், முதலீடுகளுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கொள்கையில் மாற்றங்கள் செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திருத்தங்கள், புத்தொழில் நிறுவனங்கள், ஆழ் தொழில்நுட்பத் (DEEP TECH) துறைகள் ஆகியவற்றுக்கு உலகளாவிய நிதிகளிலிருந்து அதிக வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதையும், தொழில் செய்வதை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. 60 நாட்களுக்குள் எடுக்கப்படும் விரைவான முடிவு, இந்தியாவில் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்காக நிறுவனங்கள் கூட்டு செயல்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள உதவும். நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளிலிருந்து வரும் முதலீடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கொள்கையில், அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இந்த மாற்றங்கள், மின்னணு பாகங்கள், மூலதனப் பொருட்கள், சூரிய மின்கலங்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும்.





33,500 கோடி ரூபாயில்
உள்கட்டமைப்புக்கு ஊக்கம்

# தில்லி ஒரு புதிய சகாப்தத்தைக் காண்கிறது


**தில்லி, இந்தியாவின் வரலாற்றுப் பயணத்தில் முக்கிய நகரம். இந்த நகரம் இப்போது ஒரு புதிய சகாப்தத்தைக் காண்கிறது. இது ஒரு புதிய இந்தியாவுக்கான தன்னம்பிக்கையின் சகாப்தம். இந்தியாவின் இந்தத் தன்னம்பிக்கை, நாட்டை ஒரு வளர்ச்சியடைந்த எதிர்காலத்தை நோக்கி வழிநடத்தும். இந்தத் தொலைநோக்குப் பார்வையை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி, 2026 மார்ச் 08 அன்று, தில்லியில் நடைபெற்ற, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் தொடக்கம், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் ஆகிய விழாக்களில், ஒவ்வொரு தீர்மானத்தையும் நிறைவேற்ற நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கூறினார்.**


பொலிவூட்டப்பட்டு அழகாக மாறிய தில்லி... நாட்டின் தலைநகரம் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான வளர்ச்சி எந்திரமாக உருமாறுகிறது. நாட்டின் முன்னேற்றத்தின் பிரதிபலிப்பாக தில்லி மாறி வருகிறது. கடந்த 11 ஆண்டுகளில், மத்திய அரசு ஒரு தெளிவான தொலைநோக்குப் பார்வையுடன் தேசியத் தலைநகருக்கு ஒரு புதிய அடையாளத்தை வழங்கியுள்ளது. சுதந்திர இந்தியாவின் சொந்த நாடாளுமன்றக் கட்டடம் முதல், பாரத மண்டபம், யஷோபூமி, கடமைப் பாதை, கடமை மாளிகை, தேசியப் போர் நினைவிடம், மெட்ரோ ரயில் விரிவாக்கம் வரை, எண்ணற்ற முயற்சிகள் நாட்டின் தலைநகருக்கு ஒரு புதிய வடிவத்தையும், அழகையும் அளித்துள்ளன. தில்லி, இந்தியாவின் தலைநகரம் மட்டுமல்ல. அது இந்தியாவின் அடையாளம். இந்தியாவின் ஆற்றலின் அடையாளச் சின்னம். எனவே, தில்லியின் வளர்ச்சி என்பது ஒரு நகரத்தின் வளர்ச்சி மட்டுமல்ல. அது ஒட்டுமொத்த நாட்டின் பிம்பத்துடன் பிணைக்கப்பட்டது. தில்லி எவ்வளவு நவீனமாகிறதோ, அவ்வளவு வசதியான நகரமாக அது மாறுகிறது. தில்லியின் போக்குவரத்து இணைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. தில்லியின் வளர்ச்சியால், இந்தியாவின் தன்னம்பிக்கை உலகிற்கு வலுவாகத் தெரியும்.

தில்லியில் சுமார் 33,500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர

## பாரம்பரிய இடங்கள்...

- நாட்டிற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்த துணிச்சல் மிக்க வீரர்களைப் போற்றும் வகையில் தேசியப் போர் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.
- புதிய நாடாளுமன்றக் கட்டடம், கடமைப் பாதை, கடமை மாளிகை, சேவா தீர்த்தம் ஆகிய அனைத்தும் 21-ம் நூற்றாண்டில் இந்தியாவின் புதிய சிந்தனையைப் பிரதிபலிக்கின்றன.
- பாரத மண்டபம், யஷோபூமி போன்ற இடங்கள், இந்தியாவின் கலாச்சாரம், இந்திய வர்த்தகம், இந்தியாவின் ஆற்றல் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துரைக்கும் முக்கியத் தளங்களாக மாறியுள்ளன.
- பிரதமர் அருங்காட்சியகம், யுக யுகத்திற்கான பாரத அருங்காட்சியகம் போன்ற புதிய அருங்காட்சியகங்களும் தில்லியின் அடையாளத்தை வலுப்படுத்துகின்றன.





## மெட்ரோ திட்டங்களின் தொடக்க விழாவும் புதிய திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவும்

- பிரதமர் நரேந்திர மோடி சரோஜினி நகரில் உள்ள மத்திய அரசு ஊழியர்களுக்கான ஜிபிஆர்ஏ வகை-5 குடியிருப்புகளைப் பார்வையிட்டு, வீடு ஒதுக்கீடு செய்யப்பட்ட பெண்களுக்குச் சாவிகளை வழங்கினார்.
- சுமார் 18,300 கோடி ரூபாய் மதிப்பிலான தில்லி மெட்ரோ திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- இரண்டு புதிய தில்லி மெட்ரோ வழித்தடங்களைப் பிரதமர் திறந்து வைத்தார். இவற்றில், சுமார் 12.3 கிலோமீட்டர் நீளமுள்ள மஜ்லிஸ் பார்க் – மஜ்பூர் பாபர்பூர் (இளஞ்சிவப்பு) வழித்தடமும், சுமார் 9.9 கிலோமீட்டர் நீளமுள்ள தீபாலி சௌக் – மஜ்லிஸ் பார்க் (செந்நீல மற்றும் – மெஜந்தா) வழித்தடமும் அடங்கும்.
- புராரி, ஜகத்பூர் – வஜிராபாத், கஜூரி காஸ், பஜன்புரா, யமுனா விஹார், மதுபன் சௌக், ஹைதர்பூர் பட்லி மோர், பால்ஸ்வா, மஜ்லிஸ் பார்க் உள்ளிட்ட தில்லியின் பல பகுதிகளுக்கு இந்தப் புதிய இணைப்பு பயனளிக்கும்.
- தில்லி மெட்ரோவின் 5-ஏ கட்டத்தின் கீழ், சுமார் 16.10 கிலோ மீட்டர் மொத்த நீளமுள்ள மூன்று புதிய வழித்தடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- இந்த மூன்று புதிய வழித்தடங்கள் ராமகிருஷ்ண ஆசிரம மார்க்கம் முதல் இந்திரபிரஸ்தா வரை, ஏரோசிட்டி முதல் இந்திரா காந்தி விமான நிலைய முனையம்-1 வரை, துக்ளகாபாத் முதல் காலிந்தி குஞ்ச் வரை அமைந்துள்ளன.
- இந்த வழித்தடங்கள் தேசியத் தலைநகரில் உள்ள பல முக்கிய இடங்களுக்கு நேரடி இணைப்பை வழங்கும். அவை நொய்டா, தெற்கு தில்லி, விமான நிலையம் ஆகிய பகுதிகளுக்கு இடையே பயணிக்கும் மக்களுக்கான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தும்.

பிரதமர் பங்கேற்ற நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

## ஜிபிஆர்ஏ எனப்படும் அரசு ஊழியர்களுக்கான பொது குடியிருப்புத் தொகுப்புத் திட்டங்களின் தொடக்க விழாவும் அடிக்கல் நாட்டு விழாவும்

**ரூ.15,200** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் அரசு ஊழியர்களுக்கான பொது குடியிருப்பு வசதி (GPRA) மறுமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொடங்கி வைக்கப்பட்டு, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

- இந்தத் திட்டங்கள் சரோஜினி நகர், நேதாஜி நகர், கஸ்தூர்பா நகர், சீனிவாசபுரி போன்ற முக்கிய இடங்களில் அமைந்துள்ளன.
- ஜிபிஆர்ஏ குடியிருப்புகளை நவீனமாக்குவதற்கும், அரசு ஊழியர்களுக்கும் நிர்வாக அலுவலகங்களுக்கும் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை உருவாக்குவதற்குமான அரசின் லட்சியத் திட்டத்தின் ஒரு பகுதியாக இது அமைந்துள்ளது.
- அரசு கருவூலத்திற்குச் சுமை அளிக்காமல் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யும் புதுமையான, தன்னிறைவு பெற்ற நிதி மாதிரி மூலம் இந்த மறுமேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மறுமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்கு 9,350-க்கும் அதிகமான நவீன குடியிருப்புகள் வழங்கப்படும்.
- சுமார் 48 லட்சம் சதுர அடி அலுவலக இடம் உருவாக்கப்பட்டு, நிர்வாகத் திறன் கணிசமாக மேம்படுத்தப்படும்.

மோடி, தில்லியில் நவீன வசதிகளும், உள்கட்டமைப்பும் வேகமாக விரிவடைந்து வருவதைக் குறிப்பிட்டார். சில நாட்களுக்கு முன், நமோ பாரத் விரைவு ரயில் என்ற அதிவேக ரயில் மூலம் தில்லி, மீரட்டுடன் இணைக்கப்பட்டது. மெட்ரோ ரயில் நான்காம் கட்டத் திட்டம் தொடங்கப்பட்டதன் மூலம், தில்லி மெட்ரோ கட்டமைப்பு 375 கிலோமீட்டருக்கும் அதிகமாக விரிவடைந்துள்ளது.

புதிய மெட்ரோ பிரிவு தலைநகருக்குச் சிறந்த வசதியை வழங்குவதோடு, அதன் பலன்களைத் தேசியத் தலைநகர் பகுதியில் உள்ள மக்களுக்கும் விரிவுபடுத்துகிறது. தில்லி மக்களுக்குத் தூய்மையான, வசதியான, நவீனப் பேருந்து சேவைகளை வழங்க மத்திய அரசு பாடுபட்டு வருகிறது. மத்திய அரசால் வழங்கப்பட்ட நான்காயிரத்துக்கும் அதிகமான மின்சாரப் பேருந்துகள் இப்போது தில்லி மக்களுக்குச் சேவை செய்து வருகின்றன. மேலும், கடந்த ஓராண்டில் மட்டும் சுமார் 1800 புதிய பேருந்துகள் தில்லி சாலைகளில் இயக்கப்பட்டுள்ளன.

கோட்டா விமான நிலையத்திற்குப பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்

# ஹடோட்டி பிராந்தியத்தின் லட்சியங்களுக்கு உத்வேகம் அளித்தல்

**தெளிவான நோக்கங்களும் வலுவான உறுதியும் வளர்ச்சியின் வேகத்தைப் பன்மடங்கு அதிகரிக்கின்றன. இது இப்போது ராஜஸ்தானில் தெளிவாகத் தெரிகிறது. வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான உறுதிப்பாடு இங்கு புதிய உத்வேகம் பெற்று வருகிறது. இந்தத் திசையில், பிரதமர் நரேந்திர மோடி 2026 மார்ச் 07 அன்று கோட்டா விமான நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். சுமார் 1500 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் இந்த நவீன விமான நிலையம், எதிர்காலத்தில் இப்பகுதியின் முழு வளர்ச்சியையும் துரிதப்படுத்தும்.**

ராஜஸ்தானில் ஹடோட்டி பிராந்தியத்தில் உள்ள கோட்டா நகரம் கல்விக்காக மட்டுமின்றி, ஒரு முக்கிய மின்சக்தி உற்பத்தி மையமாகவும் புகழ் பெற்று விளங்குகிறது. இங்கு அணுசக்தி, நிலக்கரி, எரிவாயு, நீர் உள்ளிட்ட பல்வேறு மூலங்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கோட்டாவின் கச்சோரி உணவு, டோரியா புடவைகள், தரையில் பதிக்கும் கற்கள், மணல்கற்கள் ஆகியவை உலக அளவில் புகழ்பெற்றவை. அருகிலுள்ள பூந்தியின் பாசுமதி அரிசி அதன் நறுமணத்திற்காக சர்வதேசச் சந்தைகளில் புகழ்பெற்றது. கடின உழைப்பு, உற்பத்தி, ஆற்றல் ஆகியவற்றுக்காக நன்கு அறியப்பட்ட இந்த முழுப் பகுதியும், கோட்டாவின் வளர்ச்சியையும் அதன் சுற்றுப்புறங்களின் வளர்ச்சியையும், இந்தப் புதிய விமான நிலையம் விரைவுபடுத்தி, ஒரு புதிய அடையாளத்தை உருவாக்கும்.

கோட்டாவில் விரைவில் விமான நிலையம் செயல்படவுள்ளதால் எதிர்காலத்தில், கோட்டா மக்களும், அதன் அருகிலுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களும் விமானப் பயணத்திற்காக, ஜெய்ப்பூருக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ பயணிக்க வேண்டிய அவசியம் இருக்காது. கோட்டா விமான நிலையத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, 2023-ல் நடைபெற்ற ஒரு நிகழ்வில் பேசியதைக் குறிப்பிட்டார். "கோட்டாவில் விமான நிலையம் அமைக்கப்படும் என்பது வெறும் கனவாக மட்டும் இருக்காது, அது நனவாக்கப்படும் என்று நான் கூறியிருந்தேன். கோட்டா விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் தருணம் இப்போது வந்திருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்," என்று கூறினார்.

கோட்டாவிற்கு அனைத்து திசைகளிலிருந்தும் வலுவான போக்குவரத்து இணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஒருபுறம், அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ், கோட்டாவில் உள்ள இரண்டு முக்கிய ரயில் நிலையங்களும் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வரும் வேளையில், மறுபுறம், கோட்டா – பூந்தி வழியாகச் செல்லும் தில்லி–மும்பை விரைவுச்சாலை, இப்பகுதி முழுவதற்கும் புதிய வாய்ப்புகளுக்கான கதவுகளைத் திறக்கிறது.

பிரதமர் பங்கேற்ற நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.






## ஹடோட்டி: வழிபாட்டுக்கான முக்கிய மையம்

ஹடோட்டி பகுதி என்பது, தொழில், நம்பிக்கை ஆகியவற்றின் ஒரு முக்கிய மையமாகத் திகழ்கிறது. பல நூற்றாண்டுகளாக, நாடு முழுவதிலுமிருந்தும் உலகெங்கிலுமிருந்தும் பக்தர்கள், ஸ்ரீ மதுராதிஷ் ஜி–யின் புனிதத் தலம், கேசவ் – ராய் – பட்டான், காதி கணேஷ் ஜி மகராஜ், கோதாவரி பாலாஜி தாம் ஆகிய புனித யாத்திரைத் தலங்களைப் பார்வையிட இங்கு வருகின்றனர். கராடியா மகாதேவிலிருந்து சம்பல் மலையைப் பார்க்கும்போது அதன் காட்சி மனதைக் கவரும் வகையில் உள்ளது. முகுந்திரா மலைகள், ராம்கர் விஷ்தாரி போன்ற வனவிலங்கு சரணாலயங்கள், இப்பகுதி முழுவதையும் வனவிலங்கு சுற்றுலாவின் ஒரு முக்கிய மையமாக மாற்றுகின்றன. விமானப் போக்குவரத்து அதிகரிப்பதால், நாடு முழுவதிலுமிருந்தும் உலகெங்கிலுமிருந்தும் சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு அதிக அளவில் வருவார்கள். இது இளைஞர்களுக்கும், வணிகங்கள், உள்ளூர் பொருளாதாரம் ஆகியவற்றுக்கும் நேரடியாகப் பயனளிக்கும்.

## கோட்டா, வளர்ச்சியின் புதிய அத்தியாயத்தை எழுதும்: மக்களவைத் தலைவர்

கோட்டா விமான நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்ட மக்களவைத் தலைவரும் கோட்டா மக்களவைத் தொகுதி உறுப்பினருமான ஓம் பிர்லா, கோட்டா மக்களின் நீண்டகாலக் கனவான புதிய விமான நிலையம் விரைவில் நனவாகப் போகிறது என்று கூறினார். கோட்டா விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள் பல தடைகளைச் சந்தித்தன. ஆனால் பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், ஹடோட்டி பிராந்தியம் குறிப்பிடத்தக்க பரிசைப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கோட்டாவில் தொழிற்சாலைகளை அமைக்க விரும்பும் தொழில்முனைவோரைத் தாம் சந்தித்ததாகவும், ஆனால் இப்பகுதியில் விமான நிலையம் இல்லாததால் அவர்கள் பின்வாங்க நேர்ந்தது என்றும் அவர் கூறினார். 2027–க்குள் விமான நிலையம் கட்டி முடிக்கப்படும் என்பதால், கோட்டா இனி ஒரு புதிய வளர்ச்சிக் கதையை எழுதும். தொழிற்சாலைகளின் வருகையால், கோட்டாவில் தகவல் தொழில்நுட்பத் துறையும் வளரும் சுற்றுலாத் துறையில் புதிய பரிமாணங்கள் உருவாகும்.





*"போக்குவரத்து இணைப்பு அதிகரிக்கும்போது, வளர்ச்சி வாய்ப்புகளும் வேகம் பெறுகின்றன. கடந்த 11 ஆண்டுகளில், நாடு முழுவதும் கட்டப்பட்ட புதிய விமான நிலையங்கள் வளர்ச்சியை விரைவுபடுத்தியுள்ளன. இந்தப் புதிய விமான நிலையங்கள் விமானப் பயணத்தை எளிதாக்கி, சுற்றுலாவை மேம்படுத்தி, இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. அத்துடன் இவை பிராந்திய வளர்ச்சியையும் துரிதப்படுத்தியுள்ளன."*

*–நரேந்திர மோடி, பிரதமர்*

உள்கட்டமைப்பு வலுப்பெற்று வருவதால், தில்லி, வதோதரா, மும்பை போன்ற முக்கிய நகரங்களுக்கான பயணம் தற்போது சில மணி நேரப் பயணமாகக் குறைந்துள்ளது. மேம்பட்ட போக்குவரத்து இணைப்புகள் இப்பகுதியை வேளாண் சார்ந்த தொழில்களுக்கான ஒரு முக்கிய மையமாக மாற்றும்.



பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

# உள்கட்டமைப்பு சக்தியால் இந்தியா வலிமையடைந்தது

**நாட்டின் பொருளாதாரத்தில் தென் இந்தியா முக்கிய இடம் வகிக்கிறது. இதனால்தான், தென் மாநிலங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்த உள்கட்டமைப்பில் மத்திய அரசு தொடர்ந்து முதலீட்டை அதிகரிக்கிறது. இந்தச் சூழலில், பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 11–ல் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் 16,450 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.**

இந்த மத்திய பட்ஜெட்டில், உள்கட்டமைப்பில் செலவிடுவதற்காக மத்திய அரசு 12 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதன் மூலம், நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், தேசிய முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அதன் வலிமையான உறுதிப்பாட்டை இந்த நடவடிக்கை சுட்டிக்காட்டுகிறது. தொடர்ச்சியான இந்த உந்துதலுடன், பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 11– ல் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் 5,650 கோடி ரூபாய் மற்றும் கேரளம் எர்ணாகுளத்தில் 10,800 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார். இந்த வளர்ச்சித் திட்டங்கள் நெடுஞ்சாலைகள், ரயில்வே, ஊரகப்பகுதி சாலைகள், தூய்மை எரிசக்தி, எரிவாயு விநியோகக் கட்டமைப்புகள், எண்ணை சுத்திகரிப்பு போன்ற முன்முயற்சிகளுடன் தொடர்புடையதாகும்.

தமிழ்நாட்டில் பாரத் பெட்ரோலியம் நகர எரிவாயு விநியோகக் கட்டமைப்பிற்குப் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இந்த முன்முயற்சியால் நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சுமார் 900,000 வீடுகள் மற்றும் ஏராளமான வர்த்தக நிறுவனங்களுக்கு குழாய்வழி இயற்கை எரிவாயு கிடைக்கும்.

“

*சூரிய மின்சக்தி உற்பத்தித் துறையில் கேரளத்தின் வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்குடன், மேற்குக் கல்லடாவில் 50 மெகாவாட் மிதக்கும் சூரிய மின்சக்தித் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கேரளம் பெரும் எண்ணிக்கையிலான நீர் நிலைகளுடன், அம்மாநிலம் மிதக்கும் சூரிய மின்சக்தித் துறையில் சிறந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.*

*நரேந்திர மோடி, பிரதமர்.*



பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

## கேரளத்தில் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டு அடிக்கல் நாட்டுதல்.

- கொச்சி பிபிசிஎல் சுத்திகரிப்பு ஆலையில் பாலிபிராஃபிலின் பிரிவுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த பாலிபிராஃபிலின் பிரிவு ஆண்டுக்கு 400 கிலோடன் திறன் கொண்டதாகும்.
- வெங்கலம் முதல் ரமணட்டுக்கரா வரை கோழிக்கோடு புறவழிச் சாலையின் ஆறு வழித்தடம், தேசிய நெடுஞ்சாலை–66 தாளப்பாடி–செங்கலா பிரிவின் ஆறு வழித்தடம் உள்பட தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. இந்த இரண்டுத் திட்டங்கள் 4,700 கோடி ரூபாய் செலவுடையதாகும்.
- பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் 23 ஊரகச் சாலைகள் திறக்கப்பட்டன.
- அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ், மறுசீரமைக்கப்பட்ட சோரனூர் சந்திப்பு, குட்டிப்புரம், செங்கனச்சேரி ரயில் நிலையங்கள் திறக்கப்பட்டன.
- சோரனூர்– நீலாம்பூர் சாலை ரயில்வே வழித்தடத்திற்கான மின்மயமாக்கல் திட்டம் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- கேரளாவில் கொல்லம் மாவட்டத்தின் மேற்குக் கல்லடாவில் 50 மெகாவாட் மிதக்கும் சூரியமின் சக்தித் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.



## தமிழ்நாட்டில் திட்டங்கள் தொடங்கப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டது.

- நீலகிரியிலும், ஈரோட்டிலும் 3,680 கோடி ரூபாய் மதிப்பில் பிபிசிஎல்– ன் நகர எரிவாயு விநியோகக் கட்டமைப்பிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 8.8 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளுக்கு பிஎன்ஜி இணைப்புகள் வழங்கப்பட்டு, 201– க்கும் அதிகமான சிஎன்ஜி நிலையங்கள் அமைக்கப்படும்.
- ஆண்டுக்கு 672 ஆயிரம் மெட்ரிக் டன் திறனுடன் சென்னையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் உயவு எண்ணை கலப்பு ஆலை நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இதற்காக சுமார் 1,490 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது
- பிரதமரின் கிராம சாலைத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் மொத்தம் 370 கிலோமீட்டர் நீளத்திற்கு 89 ஊரகச் சாலைகள் திறக்கப்பட்டன.
- தேசிய நெடுஞ்சாலை– 81–ல் கங்கைகொண்ட சோழபுரம் அருகே பசுமைப் புறவழிச்சாலைக்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

இத்திட்டங்கள் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நிலையில் எரிசக்தி பெறுவதையும் போக்குவரத்து வசதியையும் மேம்படுத்தும். வெறும் எட்டு ஆண்டுகளில், இத்திட்டத்தின் நேர்மறையான சுற்றுச்சூழல் தாக்கம் 40 மில்லியன் மரக்கன்று நடுவதற்கு சமமாகும்.

தென்னந்தோப்புகளும் நெல் வயல்களும் கேரளத்தின் வளமையை மேம்படுத்தும். இந்த வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணித்து, கேரளத்தில் 10,800 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்துப் பிரதமர் மோடி பொதுமக்களிடையே உரையாற்றினார். உள்ளூர் மக்களின் உணர்வுகளை மதிக்கும் வகையில் "கேரளா" மாநிலத்தின் பெயரைக் கேரளம் என்று அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முடிவு பற்றிக் குறிப்பிட்டார். இது மலையாள மொழி மற்றும் கலாச்சாரத்தின் வளமான பாரம்பரியத்திற்கு மதிப்புமிகு சின்னமாகவும் உள்ளது. தற்போது, தேசமும் உலக நாடுகளும் இம்மாநிலத்தை "கேரளம்" என்ற பெயரால் ஒரே மாதிரியாக அங்கீகரிக்கின்றன.

இந்தியாவின் உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதை உலக நாடுகள் தற்போது பாராட்டுகின்றன. தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் உள்கட்டமைப்பு முதலீடுகள் தொடர்பாகப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி உள்கட்டமைப்பில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ரூபாயும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன என்று தெரிவித்தார். இந்த அனைத்துத் திட்டங்களும், கூட்டாக, ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை அளிக்க உள்ளன.




# ‘பட்ஜெட்’

## மக்கள் விருப்பங்களை நனவாக்குதல்

**நாட்டின் குடிமக்களிடம் சாத்தியக்கூறுகளின் பயன்கள் சென்றடைவதை உறுதி செய்வதில் பட்ஜெட் குறித்த கருத்தரங்குகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு பைசாவும் எந்தக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டதோ, அதற்காக முடிந்தவரை விரைவாக அளிக்கப்படுகிறது. இந்நோக்கத்துடன், பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 6– ல் 'வேளாண் மற்றும் ஊரக மாற்றம்' என்ற தலைப்பில் பட்ஜெட் குறித்த மூன்றாவது இணையவழிக் கருத்தரங்கிலும், அதைத் தொடர்ந்து மார்ச்– 9– ல் 'அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம்– மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுதல், என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட நான்காவது கருத்தரங்கிலும் உரையாற்றினார்.**

இந்தியாவின் நீண்டகால வளர்ச்சிப் பயணத்தில் உத்திபூர்வ தூணாக வேளாண்மை திகழ்கிறது. இத்தத்துவ வழிகாட்டுதலுடன் மத்திய அரசு வேளாண் துறையைத் தொடர்ந்து வலுப்படுத்தியுள்ளது. வேளாண்மை மற்றும் ஊரக மாற்றம் குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, உணவு தானியங்கள் முதல் பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் வரை பரந்த அளவில் நாடு தற்போது சாதனை அளவிலான உற்பத்தியை அடைந்து வருவதாகக் குறிப்பிட்டார். எனினும், 21–ம் நூற்றாண்டின் இரண்டாவது காலாண்டு தற்போது தொடங்கியுள்ள நிலையில், வேளாண்மைத் துறைக்கு சமமாகப் புத்துயிரூட்டுவது அவசியமாகும். இந்நோக்கத்தை துல்லியமாக அடைவதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டின் பட்ஜெட் பல்வேறு புதிய முன்முயற்சிகளைக் கொண்டுள்ளது.

### “வேளாண் மற்றும் ஊரக மாற்றம்” குறித்த இணையவழிக் கருத்தரங்கில் பிரதமர் மோடி உரையின் முக்கிய அம்சங்கள்.

- நடப்பு நிதியாண்டின் மத்திய பட்ஜெட் வேளாண்மை ஊரக மாற்றத்திற்குப் புதிய திசையை அளித்துள்ளது.
- அரசின் முக்கிய முன்முயற்சிகள் விவசாயிகளின் சிரமங்களைக் குறைத்து, அவர்களுக்கு அடிப்படைப் பொருளாதாரப் பாதுகாப்பை அளித்துள்ளது.
- வேளாண்மையை உயர் மதிப்புடையதாக மேம்படுத்துவதன் மூலம் இத்துறை உலகளாவிய போட்டித்தன்மை கொண்டதாக மாறும்.
- பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் மூலம் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தியை அதிகரிப்பது ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்கும்.
- ஊரகப்பகுதி வளமைக்கு மீன் வளர்ப்பு என்பது உயர் மதிப்படையதாகவும், உயர் தாக்க துறையாகவும் உருவெடுக்க முடியும். ஏற்றுமதி வளர்ச்சிக்கு முக்கியத் தூணாக இருக்கும்.
- 'அக்ரி ஸ்டேக்' மூலம் வேளாண்மைக்கான டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை அரசு வடிவமைக்கிறது.
- அமைப்புகள் ஒரு தொழில்நுட்பத்தை ஏற்று, நிறுவனங்கள் அதை ஒருங்கிணைத்து, அதன் மீது தொழில் முனைவோர் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும்போது தொழில்நுட்பம் பலன் அளிக்கிறது.
- பல்லாயிரக்கணக்கான சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படுவதுடன், உள்கட்டமைப்புக்காக தற்போது நாடு முழுவதும் பெரும் இயக்கம் நடைபெறுகிறது.

## “அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம்: மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுதல்”
### இணையவழிக் கருத்தரங்கில் பிரதமர் மோடி உரையின் முக்கிய அம்சங்கள்.

- இந்தியா தற்போது தடுப்பு மற்றும் ஒட்டுமொத்த சுகாதாரப் பராமரிப்பில் கவனம் செலுத்தும் தொலைநோக்கு பார்வையுடன் பணியாற்றுகிறது.
- கடந்த சில ஆண்டுகளாக, நாட்டின் சுகாதாரப் பராமரிப்பு உள்கட்டமைப்பு வலுப்பெற்றுள்ளது, சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் அணுகல் அனைத்து கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ஆயுஷ்மான் பாரத் திட்டம், 'ஆரோக்கிய மையங்கள்' (சுகாதார மையங்கள்) போன்ற முன்முயற்சிகள் மூலம் நூற்றுக்கணக்கான மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- நமது யோகா மற்றும் ஆயுர்வேதப் பாரம்பரியங்கள் உலகம் முழுவதும் பிரபலமாகிறது.
- நமது கல்வி முறையை உண்மையான பொருளாதாரத்துடன் இணைக்கும் நடைமுறையை அவசியம் மேலும் விரைவுபடுத்த வேண்டும்.
- செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆட்டோமேசன், மின்னணுப் பொருளாதாரம், வடிவமைப்புடன் கூடிய உற்பத்தி போன்ற பிரிவுகளில் நமது கவனத்தை நாம் அவசியம் விரைவுபடுத்த வேண்டும்.
- எதிர்காலத் தொழில்நுட்பங்களுக்காக நாம் தயாராகும் வேளையில், எந்த ஒரு பெண் குழந்தையும் வாய்ப்பு கிடைக்காமல் பின்தங்கிவிடக் கூடாது என்பது முக்கியமாகும்.
- கடந்த சில ஆண்டுகளாக, விளையாட்டுகள் தேசிய வளர்ச்சியின் முக்கியப் பகுதியாகப் பார்க்கப்பட்டு வருகிறது.
- 'கேலோ இந்தியா' போன்ற முன்முயற்சிகள் நாட்டின் விளையாட்டுச் சூழலுக்கு புதிய சக்தியை ஏற்படுத்தியுள்ளது. நாடு முழுவதும் விளையாட்டு உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்படுகிறது.

*இந்தியாவில், ரசாயனம் இல்லா வேளாண்மையையும் இயற்கை வேளாண்மையையும் நாம் அவசியம் வலியுறுத்த வேண்டும். இயற்கை வேளாண்மை மற்றும் ரசாயனம் இல்லாப் பொருட்கள் உலகச் சந்தைகளை அணுகுவதற்கு நமக்கு வழிகளை ஏற்படுத்தித் தருகிறது. இந்த வசதிக்காக, அரசு தீவிரமாகத் திட்டமிட்டு, சான்றளிக்கப்பட்ட வழிமுறைகள், ஆய்வக வசதிகள் உள்பட தேவையான உள்கட்டமைப்பை அமைத்து வருகிறது.*

*நரேந்திர மோடி,*
*பிரதமர்.*

*(மார்ச் 6–ல் நடைபெற்ற பட்ஜெட் குறித்த இணையவழி கருத்தரங்கில்)*



*ஆரோக்கியம், ஒழுக்கம், தன்னம்பிக்கையுடன் இருந்தால் மட்டுமே இளையோர் சக்தி உண்மையில் தேசிய சக்தியாக மாற முடியும். நிறுவனங்கள், தொழில்துறை, கல்வி நிறுவனங்கள் ஆகியவை ஒருங்கிணையும்போது மாற்றத்தின் வேகம் விரைவடைகிறது. பட்ஜெட்டுக்குப் பிந்தைய தொடர்ச்சியான இணையவழிக் கருத்தரங்குகள் வருங்காலத்தில் உறுதியான திசையைக் காட்டும் என்று நான் நம்புகிறேன்.*

*நரேந்திர மோடி,*
*பிரதமர்.*

*(மார்ச் 9 பட்ஜெட் குறித்த இணையவழி கருத்தரங்கில்)*

கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரப் பராமரிப்பு, சுற்றுலா, விளையாட்டு, கலாச்சாரம் போன்ற அடிப்படைத் துறைகள் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான சக்தியாகத் திகழ்கின்றன. 'அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம்– மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுதல்' என்ற கருப்பொருளின் கீழ் இணையவழிக் கருத்தரங்கில் பேசிய பிரதமர் மோடி, கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நாட்டின் காலனி ஆதிக்க மனப்பான்மையில் பெருமளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். தற்போது, ஒவ்வொரு இந்திய இளைஞரும் சில புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள விரும்புகிறார். இந்தப் புதிய மனப்பான்மை நாட்டின் சிறந்த வலிமையைப் பெற்றுள்ளது; இது ஒளிமயமான எதிர்காலத்தைக் கட்டமைப்பதற்கான மிகவும் மதிப்புமிக்க மூலதனமாகப் பிரதிநிதித்துவம் செய்கிறது. இந்தச் சொத்தை திறன்பட பயன்படுத்த நமது கல்வி முறையை நாம் தொடர்ந்து நவீனப்படுத்துவது அவசியமாகும்.

பிஎம் முத்ரா, இ– நாம் மற்றும் யுபிஐ

# பொருளாதாரப் பாதுகாப்பின் ஒரு வலிமையான சுழற்சி

உலகில் விரைவாக வளர்ச்சியடைந்து வரும் மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது. பிரதமரின் முத்ரா திட்டம் மூலம் சுய வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவது அல்லது இ–நாம் போன்ற தளங்கள் மூலம் விவசாயிகள் தங்களது பொருட்களை விற்பனை செய்வதற்கு வசதியை ஏற்படுத்துவது என எதுவாயினும் அரசு புதிய தருணத்திற்கு உத்வேகம் அளிக்கிறது. சிறிய மற்றும் பெரிய வர்த்தக நிறுவனங்கள் கட்டணத்தை எந்த நேரத்திலும், எங்கேயும் ஏற்றுக்கொள்ளவும், குடிமக்களுக்குப் பரிவர்த்தனைகளை எளிமைப்படுத்தவும் யுபிஐ தொடங்கப்பட்டு மின்னணுப் பரிவர்த்தனைகளை அணுகக்கூடியதாகவும் உள்ளடக்கியதாகவும் ஆக்குகிறது.

கடந்த ஆண்டு இருந்த நிலைமைக் கொண்டு மட்டும் பொருளாதார வலிமையை மதிப்பிடும்போது, உலகின் நான்காவது மிகப் பெரிய பொருளாதார நாடாக இந்தியா இருந்தது. இந்த வளர்ச்சியின் விரைவு தொடர்ந்தால், அடுத்த இரண்டரை அல்லது மூன்று ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் மூன்றாவது இடத்தை அடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மேலும், 2030– க்குள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 7.3 டிரில்லியன் அமெரிக்க டாலரை எட்டும். இந்த வளர்ச்சியில் குறு, சிறு தொழில்துறை நிறுவனங்கள் மிகப்பெரிய பங்களிப்பை செய்துள்ளது. நாட்டில் 60 மில்லியனுக்கும் அதிகமான எம்எஸ்எம்இ– க்கள் உள்ளன. இது லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்துள்ளது.

கடந்த ஆண்டின் பட்ஜெட்டில் எம்எஸ்எம்இ–க்களின் இலக்கணத்தை அரசு விரிவாக்கம் செய்து அவற்றின் வளர்ச்சி தொடர்வதற்கான நம்பிக்கையை அவற்றுக்கு அளிக்கிறது. ஒரு தசாப்தத்திற்கு முன்பு வரை, எம்எஸ்எம்இ–க்கள் கடன்களை எளிதாகப் பெற இயலவில்லை. எனினும், பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், கடன்களைப் பெறுவது எளிதாகியுள்ளது, இது நாட்டின் பொருளாதாரத்தில் நேர்மறையானத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரதமரின் முத்ரா திட்டம் 37 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான கடன்களை வழங்கியுள்ளது. இது வெறும் நிதி உதவி ஆதாரமாக மட்டுமின்றி, ஒவ்வொரு இந்தியரின் கனவுகளை நிறைவேற்றுவதாக உள்ளது.

கடந்த 11– 12 ஆண்டுகளுக்கும் மேலாக, வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்பை அதிகரிக்க சமூகப் பாதுகாப்புடன் பொருளாதாரப் பாதுகாப்பு சுழற்சியை அரசு உருவாக்கியுள்ளது.










பிஎம் முத்ரா திட்டம்

# தொழில்முனைவுப் புரட்சிக்கு ஊக்கமளித்தல்

**2015, ஏப்ரல் 8 அன்று பிரதமரின் முத்ரா திட்டம் தொடங்கப்பட்டது முதல், நாடு முழுவதும் இது தொழில்முனைவுப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. நிதி உள்ளடக்கம் மற்றும் அடித்தட்டு அளவில் புதிய கண்டுபிடிப்புகளின் சக்தியை இது வலுப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 5.6 மில்லியனுக்கும் அதிகமான கடன்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, தொழில்முனைவுக்காக 37 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் வழங்கப்பட்டுள்ளது.**

- பிரதமரின் முத்ரா திட்டம் குறு, சிறு தொழில்துறை நிறுவனங்களுக்கு எந்த உத்தரவாதமும் இன்றி 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்குகிறது. இது வேலைவாய்ப்பு, சுய வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கிறது.
- 2024– 25–ம் நிதியாண்டில் தருண் பிளஸ் திட்டத்தின் புதிய வகையின் கீழ், முத்ரா கடன் தொகை 20 லட்சம் ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. இக்கடன் தங்களது முந்தைய கடன்களை வெற்றிகரமாக திருப்பிச் செலுத்திய தொழில்முனைவோருக்கு வழங்கப்படுகிறது.
- 2025– 26– க்கான பட்ஜெட் அறிவிப்பில், பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ், விடுதிகளுக்குத் தனி வகையை அரசு அறிமுகம் செய்துள்ளது. ஊரகப் பகுதிகளில் உள்ள விடுதிகள் இக்கடனைப் பெறுவதற்குத் தகுதியுடையவை.
- பிரதமரின் முத்ரா திட்டம் தொடங்கப்பட்டது முதல் 2026, ஜனவரி 2 வரை 37.31 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 56.31 கோடிக்கும் அதிகமான முத்ரா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.



**ரூ.15.6**

Pradhan Mantri mudra Yojna

லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான கடன், இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் 2025 அக்டோபர் வரை எஸ்சி, எஸ்டி, ஓபிசி மற்றும் சிறுபான்மையின தொழில்முனைவோரின் 33.4 கோடி கடன் கணக்குகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**69%**

சிறு கடன்களைப் பெண் தொழில் முனைவோர் பெற்றுள்ளனர்.

*"எம்எஸ்எம்இ– க்களின் இலக்கணம் சிறிய வர்த்தகத்திலிருந்து விரிவாக்கம் செய்வது என்று மாற்றமடைந்துள்ளது. கடன் உத்தரவாத முறை அதிகரிக்கப்பட்டுள்ளது. முத்ரா திட்டத்தின் கீழ், முதல்முறையாக வர்த்தகத் துறையில் நுழையும் சாதாரணக் குடிமக்களுக்கு உத்தரவாதமின்றி பெரும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனாளிகளில் 50%– க்கும் அதிகமானவர்கள் எஸ்சி, எஸ்டி மற்றும் ஓபிசி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இம்முயற்சி சிறிய வர்த்தகம் செய்யும் இளையோரின் பெரிய கனவுகளை நிறைவேற்றுவதை உறுதி செய்வதாகும்."*

*நரேந்திர மோடி, பிரதமர்.*

இந்தக் கொள்கைகள் இந்தியாவின் பொருளாதாரத்தை முன்னெப்போதும் இல்லாத வழிகளில் மாற்றியுள்ளது. சுதந்திரத்தின் நூற்றாண்டான 2047– க்குள் உயர் நடுத்தர வருவாய் நிலையை அடைய, நாடு பொருளாதார வளர்ச்சி, அமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் சமூக வளர்ச்சியின் வலிமையான அடித்தளத்தை லட்சக்கணக்கான மக்கள் கடன்களை பெறுவது மட்டுமின்றி, தேசிய வேளாண் சந்தை (இ– நாம்) போன்ற தளங்கள், விவசாயிகள் தங்களின் வேளாண் பொருட்களை விற்பனை செய்வதற்கு 1,522 மண்டிகளை அணுகுவதற்கு அனுமதித்து, அவர்களுக்கு நிதிப் பாதுகாப்பு அளிக்கிறது.

இந்தியாவில் உள்ள யுபிஐ, உலக அளவில் மின்னணுப் பணப்பரிவர்த்தனை செய்யும் முறையை மாற்றியமைத்துள்ளது. 2030– க்குள் இந்தியாவின் மின்னணுப் பொருளாதாரம் நாட்டின் மொத்த பொருளாதாரத்தில் ஐந்தில் ஒரு பங்காக இருக்கும் என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

## தேசிய வேளாண் சந்தை.

# விவசாயிகளுக்கு எளிதாக சந்தை வாய்ப்பு

வெளிப்படையான, மேம்பட்ட மின்னணுத் தளம் மூலம் தேசிய வேளாண் சந்தை (இ– நாம்) விவசாயிகளையும் வர்த்தகர்களையும் இணைத்துள்ளது. இது தங்களின் உற்பத்திப் பொருட்களை அவர்கள் விற்பனை செய்வதற்கு மேலும் வாய்ப்புகளை அளித்து, நாடு முழுவதும் வேளாண் சந்தைகளை இணைக்கிறது. இத்தளம் விவசாயிகள் தங்களின் உற்பத்திப் பொருட்களை அதிக விலைகளுக்கு விற்பனை செய்வதற்கான சுதந்திரத்தை அளிப்பதன் மூலம் பொருளாதாரப் பாதுகாப்பு சுழற்சியை வழங்குகிறது.



- இத்தளம் 2016, ஏப்ரல் 14– ல் தொடங்கப்பட்டது முதல் 4.40 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பில் வேளாண் உற்பத்திப் பொருட்கள் வர்த்தகமாகியுள்ளது.
- அறிவிக்கப்பட்ட பொருட்களுக்கு இ–நாம் செல்பேசி செயலி மூலம் செல்பேசி அடிப்படையில் விலைத்தகவல் சேவைகள் கட்டணமின்றி 24 மணி நேரமும் வழங்கப்படுகிறது.
- இச்செயலி விவசாயிகளுக்கு விலை நிலவரங்களையும், 100 கிலோமீட்டர் தொலைவிற்குள் உள்ள மண்டிகளின் அணுகல் குறித்த தகவல்களையும் காட்டுகிறது.
- வேளாண் உற்பத்திப் பொருட்கள் தரச் சோதனை வசதிகள், தூய்மையாக்குதல், தரப்படுத்துதல், வகைப்படுத்துதல் மற்றும் பேக்கேஜிங்கிற்கான உள்கட்டமைப்பை அளித்தல்.
- இ–நாம் தொடர்பான விவசாயிகளின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண 1800–270–0224 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்.
- விவசாயிகள் இடைத்தரகர்களை சார்ந்திருப்பது குறைந்துள்ளது. பேரம் பேசும் சக்தி வலுப்பட்டுள்ளது. இந்திய வேளாண் பொருளாதாரத்தின் நீண்டகால வளர்ச்சிக்கு இ–நாம் பங்களிப்பு செய்கிறது.

### இ– நாம் கட்டமைப்பு

| | |
|---|---|
| மண்டிகள் | 1522 |
| வர்த்தகமாகும் வேளாண் பொருட்கள் | 247 |
| மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் | 27 |
| பதிவு செய்துள்ள விவசாயிகள் | 18 மில்லியன் |
| வர்த்தகர்கள் | 2,72,000 |
| இடைத்தரகு முகவர்கள் | 1,20,000 |
| எஃப்பிஓ–க்கள் | 4,698 |

*(2026, பிப்ரவரி 28 நிலவரப்படி)*

UNIFIED PAYMENTS INTERFACE


## ஒரு எளிதான மின்னணுச் சில்லறைப் பணம் செலுத்துதல் அனுபவம்.

சில்லறைப் பணம் செலுத்துதலை ஒருங்கிணைந்த பணம் செலுத்துதல் இடைமுகம் (யுபிஐ) எளிதாக்கியுள்ளது. நாள்தோறும் 640 மில்லியன் பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன. 2016, ஏப்ரல் 11– ல் தொடங்கப்பட்ட யுபிஐ என்பது மக்களுக்கான தொழில்நுட்பக் கட்டமைப்பு, உலகம் முழுவதும் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தை இணைத்தல் குறித்த கதையாகும்

**640** மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் யுபிஐ மூலம் நாள்தோறும் நடைபெறுகின்றன.

**65** மில்லியன் வர்த்தக நிறுவனங்கள், 691 வங்கிகள் யுபிஐ– ல் இடம்பெற்றுள்ளன.

- 2026 ஜனவரியில் 28.33 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 21.70 பில்லியன் பரிவர்த்தனைகள் நடைபெற்றன.
- இந்தியாவில் மொத்தச் சில்லறைப் பணம் செலுத்துதல் பரிவர்த்தனைகளில் 81%– க்கும் அதிகமானவை யுபிஐ மூலம் நடைபெறுகின்றன.
- பூடான், பிரான்ஸ், மொரீஷியஸ், நேபாளம், கத்தார், சிங்கப்பூர், இலங்கை, யுஏஇ உட்பட 8 நாடுகளிலும் யுபிஐ உள்ளது.
- பரிவர்த்தனை அளவுகளில், யுபிஐ உலகின் மிகப்பெரிய சில்லறை விரைவுப் பணம் செலுத்துதல் முறை என்று சர்வதேச செலாவணி நிதியம் அங்கீகரித்துள்ளது.
- உலகளாவிய ஏசிஐ அறிக்கையின்படி, உலகளாவிய நிகழ்நேர பணப் பரிவர்த்தனை அளவுகளில் சுமார் 49% யுபிஐ பங்களிப்பு ஆகும்.




ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், நாடு குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கண்டு, உலக அளவில் சிறந்த சக்தியாக அமைந்துள்ளது. இது முறைசாராப் பொருளாதாரத்தையும் ஒழுங்குபடுத்தியுள்ளது. தொழில்நுட்பம், பணப்பரிவர்த்தனைகளை மேலும் வெளிப்படையானதாக மாற்றியுள்ளது.



**PMO India**
@PMOIndia

पीएम किसान सम्मान निधि योजना देश के छोटे किसानों के लिए, सामाजिक सुरक्षा का एक माध्यम बन गई है: PM @narendramodi in Guwahati



**Rajnath Singh**
@rajnathsingh

रक्षा क्षेत्र में भारत पूरी गति से आत्मनिर्भरता की ओर बढ़ रहा है, और इसके सकारात्मक परिणाम स्पष्ट दिख रहे हैं। आज भारतीय नौसेना के लिए वॉरशिप्स और सबमरीन भारतीय शिपयार्ड्स में ही बन रही हैं। हमारा लक्ष्य स्पष्ट है 2030 तक दुनिया के टॉप टेन शिपबिल्डिंग नेशन्स में स्थान बनाना और 2047 तक टॉप फाइव में पहुँचना।



**Amit Shah**
@AmitShah

UCC, डेमोग्राफिक चेंज की रोकथाम में भी कारगर सिद्ध होगा। मोदी सरकार द्वारा लाया गया हाई पावर डेमोग्राफी मिशन जल्द ही अपना काम शुरू करेगा।



**Nitin Gadkari**
@nitin_gadkari

गरिबों का स्वास्थ्य अच्छा रहें, उन्हें कम लागत में 💊💉 दवा उपलब्ध हो, इस उद्देश्य से प्रधानमंत्री श्री @narendramodi जी द्वारा कार्यान्वित 'प्रधानमंत्री भारतीय जन औषधि परियोजना' के अंतर्गत 🇮🇳 देश के गरिबों को दवाई औसत बाजार मूल्य की तुलना में 50 से 90 प्रतिशत तक सस्ती मिल रही है। सस्ती दवा के साथ साथ जन औषधि परियोजना देश भर में रोजगार सृजन में भी मददगार साबित हो रही है।



**Shivraj Singh Chouhan**
@ChouhanShivraj

आज हमारी बेटियाँ बड़ी संख्या में कृषि शिक्षा की ओर आगे बढ़ रही हैं। इसी दिशा में ICAR शीघ्र ही एक जेंडर प्लेटफॉर्म लॉन्च करने जा रहा है, जो पूरे देश के कृषि अनुसंधान नेटवर्क में महिला-केंद्रित शोध को नई गति और दिशा देगा।



**Giriraj Singh**
@girirajsinghbjp

माननीय प्रधानमंत्री जी के नेतृत्व में भारत में रोजगार के नए अवसर अब मेट्रो शहरों से आगे बढ़कर Tier-2 और Tier-3 शहरों में तेजी से विकसित हो रहे हैं।

देश के लगभग 70% रोजगार नॉन-मेट्रो शहरों में हैं, जिनमें Tier-3 शहरों की हिस्सेदारी 40% है। यह बढ़ती औद्योगिक गतिविधियों और युवाओं के लिए नए अवसरों का संकेत है।

## Modernising Delhi is essential to showcase India to the world: Modi

**The Hindu Bureau**
NEW DELHI

Prime Minister Narendra Modi on Sunday inaugurated two new Delhi Metro corridors and laid the foundation stone for three more metro lines. He said the government was working in mission mode to address the diverse challenges facing the city.

He inaugurated and laid the foundation stone for projects worth ₹15,200 crore under the Central government's General Pool Residential Accommodation (GPRA) redevelopment plan. The total cost of all projects is around ₹33,500 crore.

Addressing a rally at Burari, Mr. Modi said the projects ranging from the growth of the Metro network to the establishment of modern residential complexes for thousands of government employees would give a new momentum to the development of Delhi. "The people of Delhi, with new hope and a new resolve, formed the double-engine government here a year ago, and its result is visible today in these development works," he said.





Prime Minister Narendra Modi being felicitated by Union Minister Manohar Lal and Chief Minister Rekha Gupta on Sunday. ANI

The two new corridors are the Majlis Park-Maujpur Babarpur (Pink Line) corridor of 12.3 km and the Deepali Chowk-Majlis Park (Magenta Line) corridor of 9.9 km. The three new corridors for which the foundation stone was laid are R.K. Ashram Marg to Indraprastha, Aerocity to Indira Gandhi Airport Terminal-1 and Tughlakabad to Kalindi Kunj.

**Global identity**

Mr. Modi said Delhi was the global identity and energy symbol of Indian democracy, and that modernising the capital's infrastructure and connectivity was essential for showcasing India's confidence to the world. "The more modern, convenient, and better connected Delhi becomes, the more strongly India's self-confidence will be visible to the world," he said.

Attacking the previous Aam Aadmi Party government, Mr. Modi said it was essential to remove the "*AAP-da*" (disastrous) government in Delhi as if there had not been an "*AAP-da*" government, the Metro Phase Four project would have been completed long ago. "For their own political interest, the previous government had put the convenience of millions of people of Delhi at stake. Now, after the formation of the BJP government, Delhi's all-round development has accelerated tremendously," he said.

Mr. Modi said the people in Delhi were not only getting access to improved road, metro and bus connectivity, but also the benefits of Ayushman scheme, SVANidhi credit card, new convention facilities and museums, and would soon get a clean Yamuna. "The current development model focuses on immediate action and tangible results, ensuring that projects are swiftly transitioned from planning to ground-level execution. Every family in Delhi will now lead a more prosperous life," he said.

Chief Minister Rekha Gupta said the government had taken steps to tackle pollution and waterlogging and brought a new drainage master plan for the city after 50 years to address long-standing issues. She highlighted changes brought in to improve transparency in governance, schemes for women and the poor.

## PM: TN wants a govt for every family, not for just one family

### Positions NDA As Alternative To DMK In State

V.Srivatsal@timesofindia.com



AIADMK's general secretary Eddapadi K Palanisami felecitating Modi in Trichy ANI

**Trichy:** Prime Minister Narendra Modi Wednesday positioned NDA as a credible alternative to Dravida Munnetra Kazhagam in Tamil Nadu and called upon the people to support the alliance to bring transparent governance and faster development to the state.

Speaking at the NDA rally in Trichy, Modi said the upcoming election was the most important election in Tamil Nadu's history. "The choice before the people is clear. One path leads to dynasty politics and corruption. The other path leads to development, opportunity and honest governance," he said.

Modi said "the desire for change is gaining huge momentum. The whole state has made up its mind to throw out DMK govt. People want a govt for every family, not for just one family, and they know only NDA can bring that change."

He said infrastructure funds given to Tamil Nadu had tripled in the last decade. The NDA govt has spent nearly Rs 57,000 crore on highways, which is four times more than the Congress-DMK govt. "Nearly Rs 8,000 crores has been invested in building rural roads," Modi said.

Farmers of the delta are the backbone of Tamil Nadu's food security but DMK has failed to deliver on its promises, he said. "They deserved fair prices, good facilities and modern storage infrastructure. DMK also promised a big increase in MSP for paddy but failed to fulfil these promises," he said. He alleged that illegal sand mining was destroying rivers and threatening the environment. "Yet those responsible for this continue to enjoy DMK's protection," he claimed.

The rally was attended by leaders of the alliance parties, including AIADMK general secretary Eddapadi K Palanisami, PMK's Anbumani Ramadoss, AMMK's TTV Dhinakaran and TMC leader G K Vasan. This is the third time Modi has visited the state this year and the second this month.

EPS attacked CM M K Stalin for criticising AIADMK's alliance with BJP. "It's their alliance which is in tatters. DMK has become a slave of Congress and managed to retain the alliance only by begging Congress," he claimed.

Earlier, at a govt event, the PM inaugurated and laid foundation stones for projects worth Rs 5,600 crore.

## PM to give land deeds to Assam tea workers

Prabin.Kalita@timesofindia.com

**Guwahati:** PM Modi will launch the distribution of land deeds to thousands of tea workers in poll-bound Assam on March 13, giving them a stake in plantations where they have lived and worked for two centuries since British planters brought them from villages of Chotanagpur division, Bihar and Bengal.

Nearly 3.5 lakh families across 825 tea estates stand to benefit, with the initiative seeking to legalise land rights of generations living in labour lines without homesteads of their own. "The PM will hand over the first land patta to a designated tea garden worker. Distribution will then be carried out across the state," CM Himanta Biswa Sarma said.

Tea tribes and Adivasis, about 20% of Assam's population, influence nearly 35 of 126 assembly seats. The assembly amended the Assam Fixation of Ceiling on Landholdings Act in Nov 2025 to enable transfer of labour lines to workers.

## Won't leave our people stranded in W Asia: Modi

Vishnu Varma

THIRUVANANTHAPURAM: Prime Minister Narendra Modi on Wednesday appealed to the people not to pay attention to rumours or panic over LPG supply disruptions caused by the ongoing war in West Asia as he accused the Congress of making provocative statements and asserted that the government was committed to ferrying Indians to safety.

In a series of events in poll-bound Tamil Nadu and Kerala, Modi also hailed the achievements of the Union government, accused the two state governments of corruption, and said the National Democratic Alliance will do well in the upcoming assembly elections.

"I understand that you may be concerned about the prevailing situation in the Gulf and West Asia, particularly about the safety of our citizens. You must remember that we have a government at the Centre committed to ferrying Indians to safety...All our friendly countries are assisting our citizens and we are indebted to them. But it is unfortunate that the Congress is playing politics over it. It is making provocative statements. It wants the situation to worsen so that it can laugh and make reels about Modi," the PM said in Kochi.

"Even at the time of war, the Congress and the Left ecosystems are creating panic and fear. I urge the people to remain alert," he said.

Later in the day, in Tiruchirappalli, Modi urged that only verified information be disseminated.

"I would like to appeal to people, let us only spread correct, verified information...There is no need to panic or pay attention to rumours. In any situation, we have seen how our government always puts the interests of India above everything...we will navigate every situation successfully," he said.

In Kerala, Modi claimed credit for tweaking the name of the state to 'Keralam', unveiled a slew of development projects in the fields of petroleum, railways, and roads worth around ₹11,000 crore, and appealed to voters to choose a BJP-led NDA government instead of the repeat Left Democratic Front-United Democratic Front cycle of regimes.

"Changing the name of the state is a tribute to the emotions of the people. The renaming is a tribute to the glorious history and tradition of the Malayalam language," he said. In February, the Union cabinet approved the proposal to rename the state as 'Keralam'. The Kerala assembly had unanimously passed a resolution in August 2023 to rename the state as 'Keralam' in all languages.

Modi said that the state did not achieve the kind of progress and development it deserved despite ample resources in culture, nature, technology and talent. "The LDF and the UDF think their opportunity for power comes every five years. That's why they do not work for the development of the state. That's why projects get stalled. It is important to break this pattern in Kerala. You have given the LDF and UDF 70 years. Please give the BJP-led NDA five years. You will see glimpses of 'viksita Keralam'. This is Modi's guarantee," he said.

"The LDF and the UDF may vary in names, but they are partners in crime, corruption, communalism, halting developing and destroying industries. While the UDF is dependent on the Jamaat-e-Islami and wants to break the peace of Kerala, the LDF has age-old ties with the PDP whose leader was involved in extremist acts. You must remain alert about both forces," he added.

Modi said the "prince" of the Congress party, a reference to Rahul Gandhi, didn't know that the youth of Kerala and across India are developing drones. "The Congress has no trust or faith in the youth of this country. The Congress's yuvaraj can never fully realise the potential of the youth of Kerala," he said.

Earlier in the day, Modi addressed the golden jubilee celebrations of the Akhila Kerala Dheevara Sabha, an outfit representing the fisherfolk community in the state. He also undertook a roadshow from Marine Drive to JLN Stadium in Kochi.

In Tiruchirappalli, the PM slammed the Dravida Munnetra Kazhagam rule in Tamil Nadu and said that people wanted a government that worked for every family, and not just for one family. "In DMK rule, everything starts and ends with one family...In 2021, people of Tamil Nadu brought DMK to power, and instead of taking it as a responsibility, they have betrayed the mandate," he said.

Further, just like all rivers go to sea, all corrupt money in the state goes to one family, he alleged.

The DMK was "infamous for their scientific corruption" model, he said, and alleged that "ministers may change, MLAs may change, but power remains only with one dynasty."

On the international airport status for Madurai, he said the Centre brought the world to the doorstep of the city. "The whole of Tamil Nadu has made up its mind to throw out the DMK regime."

With inputs from PTI

## PM unveils ₹10,800-cr projects in Kerala, State govt boycotts event

**Our Bureau**
Kochi

Prime Minister Narendra Modi on Wednesday launched multiple infrastructure and development projects worth over ₹10,800 crore in Kerala, amid a boycott of the function by Chief Minister Pinarayi Vijayan and other Ministers.

State Ministers stayed away from the event following the omission of PWD Minister PA Mohammed Riyas from the inaugural function of the first stretch of the six-lane expansion of National Highway 66 in Kozhikode.

Ahead of the Prime Minister's inauguration of the highway expansion, Mohammed Riyas protested at Ramanattukara in Kozhikode, describing the exclusion of a State Minister from the event as a humiliation to the State.

**KEY PROJECTS**

Among the key projects inaugurated were the ₹5,500-crore Polypropylene Unit at the BPCL Kochi Refinery, the six-lane Kozhikode Bypass, a 50-MW floating solar project at West Kallada in Kollam, three redeveloped railway stations under the Amrit Bharat Station Scheme, and the Shoranur–Nilambur Road Railway Line Electrification Project.



Prime Minister Narendra Modi addressing a public meeting in Ernakulam on Wednesday

**SOLAR PROJECT**

Speaking on the occasion, Modi said the unit at BPCL Kochi Refinery will have the capacity to produce four lakh tonnes per annum to support packaging, automotive components, medical devices, textiles sectors and household products.

**Modi stressed the need to generate more power to support various industrial sectors as India emerges as a manufacturing hub**

While laying the foundation stone for the 50-MW floating solar project at West Kallada, Modi stressed the need to generate more power to support various industrial sectors as India emerges as a manufacturing hub in AI and semiconductor industries.

Clean and green energy will be essential to support this growth, he said, adding that the project will contribute to India's clean-energy goals and reinforce the country's commitment to a sustainable and low-carbon future.

Kerala, with a large number of water bodies, holds great potential in floating solar power plants.

He said the six-lane Thalapady-Chengala section of NH-66, built at a cost of over ₹2,650 crore, forms part of the Mumbai-Kanyakumari Economic Corridor.

## PM asks ministers to keep watch on energy concerns

RAJESH KUMAR THAKUR @ New Delhi

PRIME Minister Narendra Modi is learnt to have expressed serious concern over India's energy security, amid the ongoing tensions involving the United States, Israel, Iran and the Gulf nations.

While chairing a meeting of the Union Cabinet on Tuesday, the Prime Minister directed his ministers to remain vigilant and ensure that citizens are not inconvenienced as a result of the evolving geopolitical situation linked to the conflict.

According to sources, Modi directed members of his Cabinet to work diligently to minimise any potential impact of the West Asia tensions on citizens. "Departments have been asked to closely monitor developments and ensure that contingency plans are in place, particularly in sectors that could be directly affected by fluctuations in energy supplies", said a senior source.

Modi is also learnt to have highlighted the importance of strong coordination among ministries so that the government can respond effectively and in a timely manner should circumstances worsen. He stressed that preparedness, close monitoring and coordinated efforts across departments would be crucial in safeguarding the country's energy security and protecting the interests of citizens.


The Prime Minister's remarks come amid growing global uncertainty, with governments worldwide closely watching developments of the West Asia conflict.

பெரும் சாதனை

# இந்தியாவில் சிறுத்தைகளின் எண்ணிக்கை ஐம்பதைக் கடந்துள்ளது

பூமியில் குறிப்பிடத்தக்க வனவிலங்கு வகைகளில் ஒன்றான சிறுத்தை, இந்தியாவில் அழிந்து விட்டதாக 1952– ல் அறிவிக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், சிறுத்தைத் திட்டத்தை அரசு தொடங்கியது. 2022 செப்டம்பரில், பிரதமர் மோடி நமீபியாவிலிருந்து வாங்கப்பட்ட 8 சிறுத்தைகளை குனோ தேசியப் பூங்காவில் விடுவித்தார். இந்திய மண்ணில் சிறுத்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.....2026 மார்ச் 9– ல் நமீபியா சிறுத்தையான 'ஜுவாலா', குனோ தேசியப் பூங்காவில் ஐந்து குட்டிகளை ஈன்றதன் மூலம் இந்தியாவில் மொத்த சிறுத்தைகளின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ளது...

- 70 ஆண்டுகளுக்குப்பின் 2023–ல் முதல்முறையாக இந்திய மண்ணில் சிறுத்தைகள் பிறந்தன.
- 2025 நவம்பரில், இந்திய மண்ணில் பிறந்த முதல் சிறுத்தையான 'முகி' ஐந்து ஆரோக்கியமான குட்டிகளுக்குத் தாயானது.
- நமீபியா சிறுத்தை 'ஜுவாலா' தற்போது ஐந்து குட்டிகளை ஈன்று மூன்றாவது முறையாகத் தாயாகியுள்ளது.
- இந்தியாவில் பிறந்த சிறுத்தைக் குட்டிகளின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்து, மொத்த சிறுத்தைகளின் எண்ணிக்கை 53 ஆக உள்ளது.
- தென் ஆப்பிரிக்காவில் இருந்து கொண்டுவரப்பட்ட காமினி என்ற சிறுத்தை, நான்கு குட்டிகளை ஈன்று இரண்டாவது முறையாகத் தாயானது.
- 2026 பிப்ரவரி 9–ல், போட்ஸ்வானாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒன்பது சிறுத்தைகளை இந்தியா குனோவில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் விடுவித்தது.



தனது குட்டிகளுடன் ஜுவாலா.



NEW INDIA SAMACHAR FORTNIGHTLY

RNI NO.: DELENG/2020/78811 APRIL 1-15, 2026

RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: Mar 19,2026 Pages: 44)

EDITOR IN CHIEF
Dhirendra Ojha
Principal Director General
Press Information Bureau, New Delhi

PUBLISHED:
Kanchan Prasad
Director General, on behalf of
Central Bureau Of Communication

PUBLISHED FROM:
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003